
கோகுலம்


குழந்தைகள் பத்திரிகை

7-7-1974

40 காசு







உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 7

ஜூலை 7, 1974

ஆனந்த, ஆனி, 23

■

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம் ரூ. 10-00

ஆறு மாதம் ரூ. 5-00

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 25-00

மானேஜர்:

கோகுலம்

கல்கிப் பூங்கா, சென்னை-600031




அட்டையில்:

அண்டிப் பிழைக்கும் நமை ஆடு
- அதை
ஆதரிக்கச் சொன்ன கவி யாரு
உண்டு உறங்கும் சுகத்தோடு
- அவர்
உரைத்த நீதி இங்கு பாரு
- வி. பாலதண்டபாணி

வண்ணப்படம்:

புஷ்பத்துறை சுப்பிரமணியம்

மூட்டை தூக்கி



உங்கள் வீடு ஒரு குடும்பம். இதற்கு அப்பாவும் அம்மாவும் தலைவர்கள். இப்படியே இந்த உலகம் முழுவதும் ஒரு பெரிய குடும்பம். இதற்கு ஈசுவரனும் அம்பிகையும் அப்பாவும் அம்மாவுமாக இருக்கிறார்கள். உங்களுக்கு உங்கள் குடும்பத்தின் தாய் தந்தையிடம் பக்தி இருக்க வேண்டும். அப்படியே பெரிய உலகக் குடும்பத்தின் பெரிய அப்பாவும், பெரிய அம்மாவுமான ஈசுவரனிடமும் அம்பாளிடமும் பக்தி இருக்க வேண்டும். உங்கள் குடும்பத்துக்கும் உலகக் குடும்பத்துக்கும் நடுவில் பள்ளிக்கூடம் என்கிற ஒரு குடும்பம் இருக்கிறது. உங்களுடன் படிக்கிறவர்களெல்லாம் உங்கள் குடும்பத்தில் உடன் வாழ்கிற சகோதரர்கள் மாதிரி. இந்தப் பள்ளிக் குடும்பத்தின் தலைவர் உபாத்தியாயர். அவரையும் ஓர் அப்பா — அம்மாவாக நீங்கள் மதித்து வணங்க வேண்டும்.

பள்ளிக் காலத்தில் உங்கள் கடமை படிப்பது ஒன்றுதான். உங்களுடைய கவனம் முழுவதும் படிப்பதிலேயே இருக்க வேண்டும். மற்ற விஷயங்களிலெல்லாம் நீங்கள் ஈடுபட இது சமயம் அல்ல. வேறு எத்தனையோ நல்ல விஷயங்கள் இருந்தாலும்கூட அவற்றையும் நீங்கள் படிப்பு முடிந்தபின்தான் கவனித்து, ஈடுபடலாம். 'இப்போதே எனக்கு அவற்றில் ஈடுபடச் சக்தியும், புத்தியும் இருக்கிறதே; எனவே உலகத்துக்கு நல்லது செய்கிற அந்தச் சமாசாரங்களில் இப்போதே பிரவேசிப்பேன்' என்று போகக் கூடாது.

ஒரு மூட்டை தூக்கியிருக்கிறான். அவனுக்கு இடுப்பைப் பிடித்துக் கொள்கிற மாதிரி இருக்கும்போது என்ன செய்வான்? மூட்டை தூக்க அப்போதும் கூட அவனுக்குக் கொஞ்சம் சக்தி இருந்தாலும், தூக்கமாட்டான். உடம்பு

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகள்



சரியில்லாததால் முதலில் அதை சொஸ்தம் செய்து கொள்வான். பூரணமாகக் குணம் ஆன பிறகுதான் மூட்டை தூக்குவான்.


உலகத்துக்கு நல்லது செய்வதும் மூட்டை தூக்குகிற மாதிரிதான். அதைச் செய்யச் சக்தி வேண்டும். சக்தியை நன்றாக வளர்த்துக் கொள்ளாமல் இந்த மூட்டையைத் தூக்குகிறேன் என்று ஆரம்பித்தால் இடுப்பைப் பிடித்துக் கொள்ளும். உடம்புக்குப் பிடிப்பு வியாதி உண்டாகிற மாதிரி உள்ளத்துக்கும் வியாதி ஏற்படும். சின்ன வயசில் உங்கள் உள்ளத்துக்குப் போதிய சக்தி ஏற்படுகிற முன்பே, படிப்புத் தவிர மற்ற விஷயங்களை மேற்கொண்டால், உள்ளத்துக்கு வியாதிதான் உண்டாகும்.

ஏற்கனவே நம் உள்ளத்தில் ஆசை, கோபம் முதலிய பல வியாதிகள் இருக்கின்றன. முன்பு நாம் எல்லோரும் ஒரு விதத்தில் மூட்டைதூக்கிகளாக இருந்ததால்தான் இந்த வியாதிகள் வந்திருக்கின்றன. நாம் செய்கிற ஒவ்வொரு தப்புக் காரியமுமாகச் சேர்ந்து மூட்டையாகி விடுகிறது. இந்தப் பிறப்புக்கு முன்னால் இன்னொரு பிறப்பில் தப்புகள் செய்தோம். அதனால்தான் இப்போது இந்த உடம்பு என்கிற மூட்டை வந்திருக்கிறது. இதில் பழைய தப்புக்களின் வாசனையும் இருக்கிறது. அதனால்தான் ஆசை, கோபம் எல்லாம் நமக்கு இருக்கின்றன. அது போவதற்காகத்தான் குழந்தையாக இருக்கும்போது பள்ளிக்கூடத்துக்குப் போகிறோம். அறியாமை என்கிற வியாதி, படிப்பு என்கிற மருந்தினால் போகிறது. அதோடு நம் கெட்ட குணங்களும் போக வேண்டும். இதற்குப் படிப்பு மட்டும் போதாது. பணிவு வேண்டும். பணிந்து கிடந்தால் கெட்ட குணங்கள் ஓடிப் போகும். தாய், தந்தை, ஆசிரியர், தெய்வம் ஆகியவர்களிடம் பக்தியோடு, படிப்பில் கவனம் செலுத்தி வந்தால் அறிவும் வரும், குணமும் வளரும்.

பணிவு இல்லாமல் படிப்பில் மட்டும் தேர்ச்சி பெற்றால் எவரும் முழு மனிதனாக ஆக முடியாது. 'நமக்கு எல்லாம் தெரியும், நாம் புத்திசாலி' என்ற அகம்பாவம்தான் வெறும் படிப்பினால் உண்டாகும். இப்படிப்பட்டவர்களுக்குப் பகவான் துணை புரியமாட்டார். பகவானின் அநுக்கிரகம் இல்லாமல் எத்தனை புத்திசாலியாலும் வாழ்க்கையில் சந்தோஷம் பெறமுடியாது.

பழைய தப்பு மூட்டை என்கிற வியாதிக்குப் படிப்பு மருந்து. இந்த மருந்தைக் கவனமாகச் சாப்பிட்டு அந்த மூட்டையை இலேசாக்கிக் கொண்ட பிறகுதான், உலகத்துக்கு நல்லது செய்வதற்காக வேறு மூட்டையைத் தூக்கலாம். டாக்டர் நோயாளிக்கு மருந்து கொடுப்பதோடு நிற்கமாட்டார். ''இன்னின்ன ஆகாரம் சாப்பிடு, இன்னின்ன சாப்பிடாதே'' என்று பத்தியமும் வைப்பார். இந்தப் பத்தியம் இல்லாமல் மருந்து மட்டும் பலன் தராது. உங்களுக்கெல்லாம் படிப்புதான் மருந்து என்றால், அதோடு சேர்த்துக் கொள்ள வேண்டிய பத்தியம் பணிவு என்பதே. பணிவுடன் தெய்வ பக்தி, குரு பக்தி, அப்பா — அம்மாவிடம் பக்தியுடன் இருந்து வாருங்கள். படிப்பிலேயே கவனம் செலுத்துங்கள். ஸ்வாமி காப்பாற்றுவார்.





விக்கின விநாயகர்

இமய மலையில் சவுபரி என்ற முனிவர் தவ நிலையில் இருந்தார். அவர் தத்துவங்கள் எல்லாவற்றையும் உணர்ந்தவர். மறைகளையும் அறங்களையும் தகுந்தவர்களுக்குப் போதிப்பவர். ஐவகை வேள்விகளையும் நாள்தோறும் செய்பவர். சிவபெருமானுடைய திருவடிகளைத் தவிர வேறு ஒன்றையும் எண்ணாதவர். பகைவர்களைத் தாழ்விக்கவும், பணிந்தவர்களை வாழ்விக்கவும் வல்லவர்.

இவருடைய மனைவி மனோரமை. குற்றமற்ற கற்பொழுக்கம் பூண்டவள். ஒரு நாள் முனிவர் நீராடச் சென்றார். அப்பொழுது கிரவுஞ்சன் என்ற கந்தர்வ மன்னன் விண் வழி சென்றான். இவன் விநாயகரை முப்போதும் தப்பாது வழிபடுபவன். இவன் மனோரமையைக் கண்டு காமுற்றான். விண்ணிலிருந்து இறங்கி மாதரசின் மலர்க் கரத்தைப் பற்றினான். மனோரமை பூனை வாயில் அகப்பட்ட கிளியைப் போல் நடுங்கினாள். ''கொடியவனே! உன் செய்கை அடாதது. கையை விடு. இல்லையேல் உன்னை ஒரு கணத்தில் சாம்பராக்குவேன்'' என்றாள்.

அப்பொழுது நீராடச் சென்ற சவுபரி வந்தார். ''மூர்க்கனே! உத்தமியின் கையைப் பிடித்த பாவத்தால் நீ மண்ணைப் பறிக்கின்ற பெருச்சாளியாகக் கடவாய்'' என்று சாபமிட்டார்.

கந்தர்வன் அஞ்சி அவருடைய அடிமலர் மீது வீழ்ந்து, ''சிறியேனுடைய பிழையைப் பொறுத்து என்னைக் காத்தருள வேண்டும்'' என்று வேண்டினான்.

முனிவர் முனிவு ஆறி, ''கிரவுஞ்சனே! நம் சொல் மாறாது. ஆயினும் முழுமுதற் கடவுளாகிய விநாயகருக்கு நீ வாகனமாவாய். அதனால் மூவரும் தேவரும் உன்னை வணங்குவார்கள்'' என்று கூறியருளினார். உடனே கிரவுஞ்சன் மலை போன்ற பெருச்சாளியாக மாறினான்.

விந்திய மலைக்கும் இமய மலைக்கும் இடையில் ஏமவதி என்னும் நகரத்தில் அபிநந்தனன் என்ற மன்னன் சிறந்த யாகம் செய்யலானான். அவன் தனது பதவியைப் பறிக்கவே இந்த வேள்வியைச் செய்கின்றான் போலும் என்று எண்ணிய இந்திரன், காலரூபி என்ற ஆற்றல் படைத்தவனை அழைத்து ''நீ சென்று அபிநந்தனுடைய வேள்வியை அழித்துவிட்டு வா'' என்று கட்டளையிட்டான்.

காலரூபி ஏமவதிக்குப் போய் யாகசாலையைத் தூளாக்கி யாகப் பொருள்களை அழித்து யாகத்தைத் தடுத்துவிட்டான்.

பின்னர் அவன் பேய் போல் திரிந்து யாகம் நடக்கும் இடங்கள்தோறும் சென்று அழித்து, முனிவர்களுக்கும் விக்கினங்களைச் செய்தான். வேத நெறிகளை அழித்தான். இதனால் இவன் விக்கினன் என்று பேர் பெற்றான்.

விக்கினனுடைய கொடுமைக்கு ஆற்றாத அருந்தவ முனிவர் ஒன்று கூடி

இறைவனைத் தொழுது போற்றினார்கள். விநாயகர் அவர்கள் முன் தோன்றி, ''முனிவர்களே! நீங்கள் அஞ்ச வேண்டாம். நாம் வரேணியராஜனிடம் தோன்றி உங்கள் துயரத்தைத் துடைப்போம்'' என்று கூறி அருளினார்.

வரேணிய வேந்தன் மகப்பேறு குறித்துப் பல காலம் தவம் பல செய்து கொண்டிருந்தான். அவனுடைய மனைவி புட்பகை ஒரு புதல்வனைப் பெற்றாள். விநாயகர் தமது யோக மாயையால், பிறந்த குழந்தையை மறைத்துவிட்டுத் தாம் அக் குழந்தையாக ஆங்கு இருந்தார்.

ஆனைமுகமும் பாசாங்குச சக்கரமும் பேழை வயிறுமாய அப்பிள்ளையைப் பார்த்து அஞ்சிய அரசன் அவரை விநாயகர் என்று உணராமல் குளக்கரையில் தழைகளை இட்டு அதன் மீது வைத்துப் போய்விட்டான்.

அண்மையில் இருந்த பராசுவ முனிவர் இக்குழந்தையைக் கண்டு, நாம் செய்த தவம் பலித்தது என்று குழந்தையை எடுத்துத் தன் மனைவி வீரிய வற்கலையிடம் தந்தார். அவள் ஆனைமுகக் கடவுள் நமக்குக் குழந்தையாக அருள் புரிந்தார் என்று ஆனந்தம் அடைந்து பாலூட்டி வளர்த்தாள்.

முன் சொன்ன பெருச்சாளி மண்ணைப் பிளந்தும் விண்ணைப் பிடித்தும் பெருந் தொல்லை செய்தது. விநாயகர் தனது பாசத்தால் அதைக் கட்டி அதன் அறியாமையை அகற்றி வாகனமாக்கிக் கொண்டார். அதன் மீது ஏறி மண்ணுலகம் எல்லாம் உலா வந்தார்.


காலரூபி என்ற விக்கினனுடைய கொடுமைக்கு ஆற்றாத பிரமாதி தேவர்கள் பராசுவருடைய இல்லத்தில் எழுந்தருளியுள்ள விநாயகரிடம் வந்து 'விக்கினனை அழித்து எங்களையும் வேத நெறிகளையும் காத்தருள வேண்டும்' என்று முறையிட்டார்கள்.

விநாயகர் தமது அங்குசத்தை ஏவினார். அது சென்று விக்கினனைப் பிடித்து ஈர்த்து வந்தது. விக்கினன் பெரு வெள்ளமாக ஆனான். விநாயகர் அக்கினி வடிவம் கொண்டு வெள்ளத்தை வற்றச் செய்தார். விக்கினன் ஊழிக் காற்று வடிவம் கொண்டு உலகங்களை நிலைகுலைய வைத்தான். தேவர்கள் யாவரும் அஞ்சினார்கள். விநாயகர் அக் காற்று வடிவத்தை மாற்றியருளினார். ஒரு வேற்படையைப் படைத்து விக்கினன் மீது ஏவினார்.

விக்கினன் அஞ்சி விநாயகருடைய திருவடியில் அடைக்கலம் புகுந்து, 'நான் உமது அடியார்களில் ஒருவன். என்னைக் காத்தருள வேண்டும்' என்று தஞ்சம் புகுந்தான்.

விநாயகர் கருணை புரிந்து, ''நீ இனி நல்லவர்களுக்கு நன்மை செய். அடியார்களுக்குத் தீங்கு செய்கின்ற கொடியார்களுக்கு இடர் செய்'' என்றார்.

விக்கினன், ''ஐயனே! அவ்வண்ணமே செய்வேன். தங்கள் திருப்பெருடன் என்னுடைய பெயரும் சேர்ந்து கொள்ள வேண்டும்'' என்று வரம் கேட்டான். விநாயகர், ''அப்படியே ஆகட்டும்'' என்று வரமளித்தார். அது முதல் ''விக்கின விநாயகர்'' என்று விநாயகர் பேர் பெற்றார்.





உப்பை அதன் மாலுகியூல்களாக்கும் முறை

அணு என்றால் என்ன?

கடந்த மே மாதம் 18ந் தேதி உலக நாடுகளின் கவனத்தையெல்லாம் நம் பாரதம் கவர்ந்தது. எதனால் தெரியுமா? ராஜஸ்தானத்துப் பாலைவனத்திலே பூமிக்கு அடியிலே அணுகுண்டை வெடித்து, 'அணுசக்தியை உற்பத்தி செய்வதில் நாங்களும் வல்லவர்கள் தான்' என்பதை உலகத்துக்குத் தெளிவு படுத்தினார்களே, நமது விஞ்ஞானிகள், அதனால்தான்.

அணுசக்தி ஒரு நாட்டுக்குக் கிடைக்குமானால் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்தலாம். சமூகப் பொருளாதாரப் புரட்சிகளை உண்டாக்கலாம். அணு வெடியின் பின்னால் உள்ள அறிவியலைப் பற்றி அறிந்து கொண்டால் இதன் உண்மை புலனாகும்.

'அணு' என்ற வார்த்தை நமக்குப் புதியதல்ல. நம் இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும் பாடல்களிலும் அணு, பரமாணு பற்றிப் பல செய்திகள் கருத்துக்கள் வருகின்றன.

'அணுவைத் துளைத்தேழ்கடலைப் புகுத்தி' என்ற சொற்றொடரிலிருந்து—அணு என்பதே கண்ணால் காண முடியாத மிக நுண்ணிய பொருள் அதையும் துளைத்து அதனுள் ஏழு கடல்களைப் புகுத்துமளவுக்கு நம் கற்பனை வளர்ந்திருக்குமானால் அணு அறிவு நமக்குப் புதியதல்ல என்பது புலனாகும்.

அது சரி. இன்றைய விஞ்ஞான ரீதியில் அணு என்றால் என்ன? அணு ஆராய்ச்சிக்கு வித்திட்ட மேதை யார்? அணுவியல் இன்று ஆலமரமாக விழுது விட்டுப் படர்ந்து வளர்ந்திருப்பதற்கு ஐன்ஸ்டீன் என்ற அறிவியல்மேதைதான் காரணம். ஐன்ஸ்டீனின் கோட்பாடு என்பது என்ன? 'ஒரு பொருளை அழிக்க முடியாது என்பது தவறு. எந்தப் பொருளையும் அழித்து அதை ஆற்றலாக — சக்தியாக மாற்றலாம். அதே மாதிரி எந்த ஒரு சக்தியையும் பொருளாக மாற்றலாம்.' இதுவே அறிவியல் மேதை ஐன்ஸ்டீனின் கண்டுபிடிப்பு. இதையே இன்னும் இலகுவாக விளக்கிப் பார்ப்போமே.

சாதாரண உப்பு இருக்கிறதல்லவா? சமையலுக்குப் பயன்படுத்துகிறாளே, அம்மா, அந்தக் கடல் உப்பு. அதில் பெரிய கட்டியாக எடுத்துக் கொள்ளுங்கள். அதை உடையுங்கள். பொடியாகிறதல்லவா ? துகள் துகளான அதை இன்னும் பொடியாக்குங்கள். இன்னும் இன்னும் பல தடவைகள். கடைசியாக நமக்குக் கிடைத்திருப்பது உப்பின் மிக மிக நுண்ணிய ஒரு துகள். இதற்கு மாலுகியூல் என்று பெயர்—உப்பின் மாலுகியூல். உப்புக் கட்டியை உடைத்து அதை அதன் மாலுகியூல்களாக்குவதற்கான மிகச் சுலபமான முறை எது தெரியுமா ? உப்பை ஒரு கோப்பை நீரில் போட்டுக் கரைய வைப்பதுதான். நீரில் உப்புக் கரைந்து உருத் தெரியாமல் உப்புநீராகிப் போகும். உப்புத் துண்டுகள் தண்ணீரில் வேகமாகவும் சீராகவும் கரைந்து கலந்து போவது எப்படி? எந்த மாலிகியூல்களால் உப்பு உருவாக்கப் பட்டிருக்கிறதோ அதிலிருந்து அவை விடுபட்டு நீரின் மாலுகியூல்களோடு கலந்து விடுகிறது. தண்ணீரும் மாலுகியூல்களால் ஆனதுதான். எப்படி?

ஒரு துளி நீரை எடுத்து அதைப் பல பாகங்களாக்குங்கள். முடிவில் கிடைப்பது தண்ணீரின் மாலுகியூல். ஆனால் இதைச் செய்வது கொஞ்சம் சிரமம்தான். தண்ணீரை அதன் மாலுகியூல்களாக மாற்றுவதற்கான சுலப வழி நீரைக் குவளையில் வைத்துக் காய்ச்சி நீராவியாக மாற்றுவதுதான்.



தண்ணீரை அதன் மாலுகியூல்களாக்கும் முறை

இதைத் தினமும் நீ பலவிதங்களில் காண்பாய். சூரிய வெப்பத்தில் நீர் ஆவியாக மறைவதும் இப்படித்தான். தண்ணீரின் மாலுகியூல்கள் ஆவியாகக் காற்றில் கலந்து மறைந்து போகும்.

இப்படியே ஒவ்வொரு பொருளேயும் சிதைத்து அதன் மாலுகியூல்களாக்கலாம். ஆகவே மாலுகியூல் என்பது என்ன? ஒரு பொருளின் மிக மிக மிக நுண்ணிய ஒரு துகள். மாலுகியூல்கள் எத்தனே நுண்ணியவை என்பதற்கு ஓர் உதாரணம் பாருங்கள்.


ஒரு விநாடிக்கு ஒரு மிலியன் மாலுகியூல்கள் என்ற விகிதத்தில் இரவுபகலாக ஒரு கண்ணுடித் தம்ளரில் நீரின் மாலுகியூல்களே ஊற்றுவோமானுல் அந்தக் கண்ணுடித் தம்ளர் நீரால் நிரம்ப நூறு மிலியன் ஆண்டுகள் பிடிக்கும். இந்தக் கணக்குத் தலேயைச் சுற்ற வைக்கிறதல்லவா ? கொஞ்சம் பொறுங்கள். தலேச் சுற்றலுக்கு மருந்து கிடைத்துவிடும்.

சாப்பாட்டு உப்பின் ஒரு மாலுகியூல் உங்களிடம் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அந்த மாலுகியூலே இரண்டாக உடைக்கிறீர்கள்... கிளிக்....! அந்த மாலுக்யூல் இரண்டு பாகங்களாக உடைகிறது. ஒன்று குளோரின் அணு, மற்றது ஸோடியம் அணு. இவ்விரண்டுமே உப்பல்ல. உப்பு என்ற பொருள் இப்போது இல்லே. இதே மாதிரி நீரின் மாலுகியூலே உடைக்கும் போது அது மூன்ருக — ஜல வாயுவின் இரண்டு அணுக்களாகவும் பிராணவாயுவின் ஓர் அணுவாகவும் பிரிகிறது. தண்ணீரின் மாலுகியூல்களெல்லாம் இப்படித்தான் ஆக்கப்பட்டிருக்கின்றன.


உங்களிடம் ஓர் அலாரம் டைம்பீஸ் இருக்கிறது. அதை அக்கு வேறு, ஆணிவேருகப் பிரித்துப் போடுகிறீர்கள், மேஜை மீது. டைம்பீஸ் இப்போது அங்கு இல்லே. அதை உருவாக்குவதற்கான பல்வேறு பாகங்கள் மட்டுமே அங்கு உள்ளன. மாலுகியூல் என்பது அலாரம் டைம்பீஸைப் போல. அணு என்பது அந்தக் கடிகாரத்தை உருவாக்கும் பல்வேறு பாகங்களேப் போன்றது.


சலவைக் கல்லே எடுத்து உடைத்துத் துகளாக்குகிறீர்கள். சலவைக் கல்லின் மாலுகியூலில் உள்ள அணுக்கள் எத்தகையன? ஒரு மாலுகியூல் சலவைக் கல் (பளிங்குக் கல்—மார்பிள்) கால்சியம் அணு ஒன்று, கார்பன் அணு ஒன்று, பிராணவாயு அணுக்கள் மூன்ருகப் பிரிகின்றன. எல்லாப் பளிங்குக்கல் மாலுகியூலும் இதே முறையில் ஆக்கப்பட்டவைதான். **(இன்னும் வரும்)**

அலாரம் டைம்பீஸ்
ஒரு மாலுகியூல்




அதன் பாகங்கள்
அணுவைப்போல







< ஒரு மாலுகியூல் உப்பு.




உப்பின் உடைபட்ட மாலுகியூல், ஒரு குளோரின் அணு ஒரு சோடியம் அணுவாகப் பிரிகிறது.




< நீரின் ஒரு மாலுகியூல்



அது உடையும்போது இரு ஜல வாயு அணு, ஒரு பிராண வாயு அணுவாகப் பிரிகிறது.



< பளிங்குக்கல் மாலுகியூல்



...உடையும் போது ஒரு கால்சியம் அணு, ஒரு கார்பன் அணு மூன்று [illegible] அணுக்களாகப் பிரிகிறது.



யாரிடம் எந்தத் திறமை இருந்தாலும் அதை வெளிப்படுத்தி உற்சாகப்படுத்தி, ஊக்குவிக்கிறார்கள். இதோ நடிப்புக் கலையில் ஆர்வமும் திறமையுமுள்ள இவ்விரு குழந்தைகளும் பிரபல தேவதைக் கதையான 'தூங்கும் அழகி'யை நடித்துக் காட்டுகிறார்கள். ஆடையணிகளை எத்தனை அழகுற அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் பாருங்கள்!



குழந்தைகளுக்காகவே தனிப்பட்ட முறையில் ஆண்டுக்கு மூன்று மாதங்கள் ஒரு விசேஷப் பொருட்காட்சியை நடத்துகிறார்கள். 'குழந்தைப் புத்தகங்களின் உலகம்' என்றொரு பகுதி. இங்குள்ள புத்தகங்கள் ரசித்துப் படிக்க மட்டுமல்ல, பார்த்து மகிழவும் கூடியவை. புத்தகங்களைத் திறந்தால் அதிலிருந்து கற்பனைக் காட்சிகள் குதிபோட்டுக்கொண்டு கண்முன்னால் உருவாகி நிற்கும். அரண்மனைகள், மந்திரக் குகைகள், கானகங்கள், பாயும் விலங்குகள் இப்படி எத்தனை எத்தனையோ!

வளரும் குழந்தைகள் வளமான வாய்ப்புக்கள்

இன்றையக் குழந்தைகளை எந்த ஒரு நாடு கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறதோ அது வருங்காலத்தில் வரலாறு படைக்கும் மகத்தான சாதனைகளை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெறும். இதை மேலை நாட்டினர் நன்கு உணர்ந்து செயல்படுகின்றனர். வளரும் குழந்தைகளுக்கு அறிவு புகட்டவும் ஆர்வத்தையும் ஆற்றலையும், வளர்த்து அவர்களைக் கலைஞர்களாகவும் கற்பனைத் திறன் படைத்தவர்களாகவும் செயல்திறன் மிக்க குடிமகனாகவும் உருவாக்க எத்தனையோ திட்டங்களை வகுத்து வருகிறார்கள்.

வருங்கால வாலிபனும் வாலைக் குமரியும் எப்படி வளர்ந்தால் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியவர்களாக உருப்பெறுவார்கள் என்பதைத் திட்டமிட்டு அதற்கேற்ற கல்விமுறைகளைப் பொழுதுபோக்கு, விளையாட்டு, கேளிக்கை இவற்றோடு கலந்து வைத்து அறிவை வளர்க்கிறார்கள். சரித்திரமும் பூகோளமும் கணிதமும் இயற்கை அறிவும் ரசாயனமும் பௌதிகமும் இன்னும் பலவும் மூளையைக் குழப்பும் வறட்டுப் பாடங்களாக இல்லாமல் வர்ணனைமிக்கதும் உள்ளத்தில் பதியக்கூடியதுமான கதைகளைப்போல மாற்றிக் கொடுக்கிறார்கள். தாங்களே செய்து பார்த்துத் திருப்தி அடையும்படி பாடத்திட்டங்களில் வழிவகுத்திருக்கிறார்கள். ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் எத்தனை அக்கறை காட்டுகிறது என்பதை இங்குள்ள படங்களில் காண்கிறீர்கள். பள்ளிப் படிப்பும் ஏட்டுக் கல்வியுமட்டுமல்லாமல் குழந்தைகளுக்கு நல்ல தரமான வாழ்க்கை முறைகளும் போதிக்கப்படுகின்றன. நவீன சாதனங்களும் வாழ்க்கை வசதிகளும் இதற்குக் கைகொடுத்து உதவுகின்றன.



200 ஆண்டுகளுக்கு முற்பட்ட 18, 19-ம் நூற்றாண்டு நாகரிகத்தை விளக்கும் பொம்மை வீட்டை ஒரு சிறுமி பார்வையிடுகிறாள். அடுப்பறையிலிருந்து படுக்கையறை வரை இந்தப் பொம்மை வீட்டில் ஒரு சிறு விஷயம் கூட விட்டுப் போயிருக்காது.



சித்திரமும் கைப்பழக்கம். சின்ன வயசிலே பிஞ்சு நெஞ்சிலே என்ன கற்பனை இருக்கிறதோ, அதை அப்படி அப்படியே வண்ண வண்ண ஓவியங்களாகத் தீட்டி மகிழ வாய்ப்பளிக்கிறார்கள். ஐந்து, ஆறு வயதுக் குழந்தை ஓவியர்கள் இதோ இங்கே சித்திரம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



'தொல் பொருட் காட்சியில் விடுமுறை' என்ற திட்டத்தில் கற்கால மனிதர்களின் நாகரிகம் பற்றிய பகுதிக்குச் சென்று அங்குள்ள பொருள்களைத் தாங்களே ஆராய்ந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப் படுகிறது. ஆறிலிருந்து பத்து வயதுள்ள குழந்தைகள் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்கால மனிதர்களின் குடியிருப்பில் ஆதிவாசிகள் எப்படி ஆடைகளை நெய்தார்கள் என்பதைத் தாங்களே செய்து மகிழும் குழந்தைகள்.



சாலை விதிகளைப் பற்றிய காட்சி நிகழ்ச்சிகள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் டெலிவிஷனில் இடம் பெறுகின்றன. இதனால் பெருமளவு விபத்துக்கள் குறைந்திருக்கின்றனவாம். பொழுது எப்படிப் பயனுள்ளதாகப் போகிறது பாருங்கள்.



எளிய முறையில் மலிவான விலையில் குழந்தைகளுக்குத் தீப்பெட்டி மிருகக் காட்சிசாலை (Match Box Zoo)யை உருவாக்கி வழங்குகிறார்கள். பிளாஸ்டிக்கில் மிருக உருவங்களையும் மரம், மலை, எல்லாமே சின்னச் சின்னதாகச் செய்து - குழந்தைகள் ஒரு பொக்கிஷமாகப் பேணிக் காக்கும் வகையில் அளிக்கிறார்கள். குழந்தைகளுக்கு மிருகங்களைப் பற்றி அறிய இது உதவுகிறது.



சாலை விதிகளைக் குழந்தைகள் ஆர்வமாகக் கற்றுக் கொள்ள மிருகங்களைப் பயன்படுத்துகிறார்கள். போலீஸ் இலாகாவிலே. நிஜமான மிருகங்களை அல்ல; படங்களை. ஒட்டைச் சிவிங்கியார்தான் முக்கிய கதாபாத்திரம். தமாஷாகவும் அதே சமயம் தரமான கல்வி போதனையாகவும் உள்ள இச் சித்திரங்களை வெட்டி ஒட்டி மாற்றி யமைப்பதன் மூலம் சாலை விதிகளும் அந்தப் பிஞ்சு நெஞ்சங்களில் அழியாமல் பதிந்து விடுகின்றன.

படங்களும் தகவலும் நன்றி: ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் செய்தித் துறை

‘ஒன்றுமில்லை’

சிட்டூர் என்று ஒரு சிற்றூர். அவ்வூரில் சின்னப்பன் என்று ஒரு விறகு வெட்டி வாழ்ந்து வந்தான். அவன் ஓர் அப்பாவி.

பக்கத்திலிருந்த காட்டுக்குச் செல்வதும், அங்கு விறகு வெட்டுவதும், வெட்டிய விறகை வெளியூருக்குக் கொண்டு சென்று விற்பதும், விற்ற பணத்தில் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு ஊர் திரும்புவதுமாகச் சின்னப்பன் ஒழுங்காகத் தன் வேலையைச் செய்து வாழ்ந்து வந்தான்.

அந்த ஊரிலேயே மலையப்பன் என்ற ஒருவனும் இருந்தான். அவன் கொடியவன். ‘‘மலையப்பன் வருகிறான்’’ என்றாலே எல்லோருக்கும் நடுக்கம்தான்.

ஒரு நாள் ஒரு பெரிய விறகுக் கட்டைத் தூக்கித் தலைமீது வைத்துக் கொள்ள முடியாமல் சின்னப்பன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் மலையப்பன் அங்கு வந்தான்.

உடனே சின்னப்பன் மலையப்பனிடம் ‘‘ஐயா! இந்தக் கட்டைத் தூக்கி என் தலைமீது வையுங்கள். என்னால் தூக்க முடியவில்லை’’ என்றான்.

‘‘சரி, விறகுக் கட்டைத் தூக்கி உன் தலைமீது வைக்கிறேன். அவ்வாறு வைத்தால் நீ எனக்கு என்ன தருவாய்?’’ என்று கேட்டான் மலையப்பன்.

‘‘என்னிடம் ஒன்றுமில்லை’’ என்று கூறிக் கொண்டிருக்கும்போதே ‘சரி’ என்று சொல்லி விட்டு மலையப்பன் விறகுக் கட்டைத் தூக்கிச் சின்னப்பன் தலை மீது வைத்தான். பிறகு சின்னப்பனிடம், ‘‘நீ கொடுப்பதாகச் சொன்னதைக் கொடு’’ என்றான்.

சின்னப்பனோ, ‘‘நான்தான் ஒன்றுமில்லை என்றேனே’’ என்றான்.

‘‘ ‘உன்னிடம் என்ன இருக்கிறது’ என்று கேட்டேன். நீ ‘ஒன்றுமில்லை’ என்றாய். எனவே நீ அந்த ‘ஒன்றுமில்லை’யைக் கொடு. இல்லாவிட்டால் விறகுக் கட்டைக் கொடு’’ என்று கூறி வம்பு செய்தான் மலையப்பன்,

சின்னப்பன் யோசித்தான். அந்த விறகுக் கட்டைப் பிடுங்கிக் கொண்டு போவதற்கு மலையப்பன் போட்டிருந்த திட்டம் அது என்று புரிந்து விட்டது.

பாடுபட்டு வெட்டிய விறகாயிற்றே. அதைப் பறிகொடுக்க அவனுக்கு எப்படி மனம் வரும்? எனவே ஊர்ப் பெரியவர்களிடம் போய் முறையிட்டான். மலையப்பனும் அவனுடன் சென்றான்.

ஊர்ப் பெரியவர்களுக்கு மலையப்பனைப் பற்றி நன்கு தெரியும். எனவே, அவர்களில் முதியவர் அவனைப் பார்த்து, ‘‘நீ இவனிடம் என்ன கேட்டாய்?’’ என்று கேட்டார்.

‘‘விறகுக் கட்டைத் தூக்கித் தலையில் வைத்தால் என்ன கொடுப்பாய்?’’ என்று கேட்டேன். சின்னப்பனோ ஒன்றுமில்லை என்றான். நான் இப்போது அவன் தருவதாகச் சொன்ன அந்த ‘ஒன்றுமில்லை’யைக் கேட்டால், தர மறுக்கிறான். விறகுக் கட்டையும் தரமாட்டேன் என்கிறான்’’ என்றான் மலையப்பன்.

‘‘அது சரி. சின்னப்பன் உனக்கு என்னதான் கொடுத்தான்?’’ என்று பெரியவர் சட்டென்று கேட்டார்.


மலையப்பனோ, முன்பின் யோசிக்காமல் ‘ஒன்றுமில்லை’ என்றான்.

உடனே ஊர்ப் பெரியவர் மலையப்பனைப் பார்த்து, ‘‘இதோ பார் மலையப்பா, நீ கேட்ட ஒன்றுமில்லையைச் சின்னப்பன் கொடுத்தாகி விட்டதே! அதை நீயே ஒப்புக்கொண்டு விட்டாய். ஆதலால் வழியைப் பார்த்துக் கொண்டு வம்பு செய்யாமல் போ’’ என்று கட்டளையிட்டார்.

ஏமாந்த மலையப்பன் ஓட்டம் பிடித்தான். சின்னப்பன் ஊர்ப் பெரியவருக்கு நன்றி கூறிவிட்டுத் தன் வழியே சென்றான்.

— ஆருத்ரா





நெப்டியூன் கிரகத்துக்கு ஒரு காலத்தில் யாராவது போக முடியுமானால் அவர்கள் அங்கு எத்தகைய காட்சியைக் காணுவார்கள் என்பதையே இந்தப் படம் சித்திரிக்கிறது. ஜலவாயு நிறைந்த கருமேகத்தின் கீழே உறைந்த அம்மோனியாவினால் மூடப்பட்டுள்ள நிலப்பரப்பு.' படத்தில் நிலப்பரப்பில் ஏற்பட்டுள்ள வெடிப்புகளைப் பாருங்கள். இதன் வழியாக கிரகத்தின் நடுமையத்தில் குளிராத நிலையிலுள்ள அக்கினிக் குழம்பில் மேலுள்ள அம்மோனியா உருகி விழுந்து தளதள வென்று கொதித்துச் சுடர் விடுகிறது.

நெப்டியூன் கிரகம்

கிருஷ்ணவேணி

சூரியப் பாதையில் எட்டாவது கிரகம் நெப்டியூன். ரோமானியர்களின் கடல் தேவதையின் பெயர் இது. கிரேக்கர்கள் இவரைப் **போஸிடான்** என்று அழைப்பார்கள். மழையின் அதிதேவதையாக நாம் யாரைக் குறிப்பிடுகிறோம்? வருண பகவானைத்தானே? நெப்டியூனையே நாம் வருணன் என்று அழைக்கிறோம். பெரிய கிரகங்களின் வரிசையில் கடைசியாக வருவது நெப்டியூன். அளவிலும் அமைப்பிலும் யுரானஸைப் போன்றது நெப்டியூன்.

1781ம் ஆண்டில் ஹெர்ஸ்செல் யுரானஸைக் கண்ட பிறகு அதைப் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார், **போவார்டு** என்ற பிரஞ்சுக்காரர். யுரானஸின் சூரியச் சுற்றுப் பாதையின் இயக்கங்களைக் கணித ரீதியில் முடிவு கட்டுவதுதான் போவார்டின் நோக்கம். ஆனால் அது அவர் எதிர்பார்த்தபடி இருக்கவில்லை. முன்னுக்குப் பின் முரணான கணிப்புகள் கிடைத்தன. அப்படியானால் பிரபல விஞ்ஞானியான நியூடனின் புவி ஈர்ப்புக் கொள்கை தவிடு பொடியாகுமே? கண்ணுக்குப் புலப்படாததொரு சக்தி யுரானஸின் இயக்கத்தை இழுத்துப் பிடிக்கிறது. அதனால்தான் இந்த மாறுபட்ட கணிப்புகள்.

1834ல் ராயல் கழகத்தின் வான சாஸ்திரியான **ஏரி (Airy)** என்பவருக்கு **ரெவரெண்டு ஹஸ்ஸே** ஒரு குறிப்பு அனுப்பினார். ''இன்னும் கண்டு பிடிக்கப்படாத ஒரு கிரகத்தின் ஈர்ப்புச் சக்தி யுரானஸின் சூரியப் பாதையைப் பாதிக்கிறது. இது பற்றி ஆராயுங்கள்'' என்று அந்தக் குறிப்பு கூறியது. ஆனால் ஏரி இக்குறிப்பைப் பெரிதாகக் கருதவில்லை.

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கணிதம் பயின்று வந்த மாணவரான **ஜான் கோச் ஆடாம்ஸ்** என்பவர் ஹஸ்ஸேயின் கருத்தையே கொண்டிருந்தார். கணிதத்தில் உயர்ந்த தகுதியைப் பெற்றதும் கிரகங்களின் சுழற்சியைக் கணக்கிட்டு அறியும் துறையில் பயிற்சி பெறுவதற்குச் சேர்ந்தார். கண்டுபிடிக்கப்படாத மற்றொரு கிரகத்தின் சக்திதான் யுரானஸின் பாதையைக் கணக்கிடும் போது நிச்சயமற்ற நிலைகளைத் தருவதற்குக் காரணம் என்ற கருத்தை 1843ல் உத்தேசமாகவும் 1845ல் உறுதியாகவும் தீர்மானித்தார். இனி இதற்கான ஆராய்ச்சியில் இறங்கியாக வேண்டியதுதான். கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின் வான சாஸ்திரியான **சாலிஸ்** என்பவரிடமிருந்து ஒரு சிபாரிசுக் கடிதத்துடன் கிரீன்விச் ஆராய்ச்சி நிலையத்தவரான ஜார்ஜ் ஏரியைக் காணச் சென்றார் ஆடாம்ஸ். அவரது துரதிர்ஷ்டம் ஏரி பிரான்ஸுக்குப் போயிருந்தார். பிரான்ஸிலிருந்து திரும்பியதும் ஏரி ஆடம்ஸுக்கு அழைப்பு விடுத்தார். வேறு வேலையாக கார்ன்வால்சென்று கொண்டிருந்த ஆடம்ஸ் தமது பயணத்தை முறித்துக் கொண்டு ஏரியைக் காணக் கிரீன்விச்





வந்தார். இப்போதும் ஏரியின் பேட்டி ஆடம்ஸுக்குக் கிடைக்கவில்லை. ஏரி வேறு முக்கிய அலுவல்களில் முடங்கிக் கிடந்ததால் ஆடம்ஸ் தம் ஆராய்ச்சிக் கணிப்புக்களின் குறிப்பை அய்ரியின் பார்வைக்கு அவரது மேஜை மீது விட்டு விட்டுத் திரும்பினார். ஆடம்ஸின் கணிப்பையும் குறிப்புக்களையும் சாவகாசமாகப் பார்வையிட்ட பிறகும்கூட ஏரி அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவில்லை. அதில் பல சந்தேகங்களையும் குறைபாடுகளையும் கிளப்பி அதற்கான விளக்கம் தரும்படி ஆடம்ஸுக்கு எழுதினார். ஆனால் இந்தத் தடவை ஆடம்ஸ் ஏரியின் கடிதத்துக்குப் பதில் போடவில்லை.

இதே சமயத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற கணித மேதையான **லெவெரியர்** ஆடம்ஸின் வழியிலேயே ஆராய்ந்து கொண்டிருந்தார். 1846ல் தம்முடைய முடிவுகளைப் புத்தகமாக வெளியிட்டு அதை ஏரிக்கு அனுப்பி அதன் மீது ஆராய்ச்சி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். ஏரி கேம்பிரிட்ஜ் வான சாஸ்திரியான **சாலிஸிடம்** புதிய கிரகத்தைத் தேடும்படி கூறினார். அசிரத்தையாகவே சாலிஸ் வானப் பகுதிகளை ஆராயலானார். முதல் நான்கு தினங்களிலேயே சாலிஸுக்குப் புதிய கிரகம் இரு தடவைகள் தட்டுப் பட்டது. ஆனால் இதை 'க்ராஸ் செக்' செய்யத் தவறிவிட்டார் சாலிஸ்.

தம்முடைய வேண்டுகோளுக்குத் தக்க பலன் கிடைக்காததைக் கண்ட




லெவெரியர் பாரிஸ் வான ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்பையும் பெற முடியாத நிலையில் ஜெர்மனியிலுள்ள வான ஆராய்ச்சி நிலையத்தின் உதவியை நாடினார்.

பெர்லின் ஆராய்ச்சி நிலையத்தில் ஆர்வமும் துடிப்புமிக்க இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். **காலி, டி அரஸ்ட்** என்பது இவர்கள் பெயர். நட்சத்திர மண்டலத்தின் புதிய கணிப்புக் குறிப்புக்களை வைத்துக் கொண்டு அரை மணி நேரத்தில் அந்தப் புதிய கிரகத்தைக் கண்டு பிடித்துவிட்டார்கள். லெவெரியர் உத்தேசமாகக் கணித்திருந்த இடத்திலிருந்து ஒரு டிகிரியும், ஆடம்ஸின் குறிப்புப்படி இரண்டு டிகிரியும் தள்ளி அந்தக் கிரகத்தின் இருப்பிடம் இருந்தது. **நெப்டியூன்** கண்டு பிடிக்கப் பட்டது 1846ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் தேதியன்று.

நெப்டியூன் கண்டுபிடிக்கப்பட்ட மூன்றாவது வாரத்தில் அதற்கு ஒரு சந்திரன் (ஸாடலைட்) இருப்பதைக் கண்டு பிடித்தார் **லாஸெல்** என்பவர். இதற்கு **டிரிடான்** என்றும் பெயரிட்டார். இந்தச் சந்திரன் மற்ற கிரகங்களின் சந்திரன்களிலிருந்து பலவிதங்





வாடா மலர்

கடன் வாங்குவது பிச்சை எடுப்பதின் அடுத்த படிதான்.

- ஜப்பானியப் பழமொழி

முகஸ்துதி என்பது பரஸ்பரம் நடக்கும் ஓர் இழி தொழில். ஒருவருக்கொருவர் ஏமாற்ற விரும்பினாலும் ஒருவரும் ஏமாந்து போவதில்லை. - கோல்டன்

ஓ! அப்படியா?

கிட்டு: 'புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?' அப்படின்னு பழமொழி. உன் இனம்தானே அந்தப் புலி? நீ ஏன் இப்படிப் புல்லைத் தின்கிறாய்?

பூனை: அதுவா, உனக்கு ஏதாவது வயிற்றுக் கோளாறு என்றால் என்ன செய்கிறாய்?

கிட்டு: மருந்து சாப்பிடுவேன்.

பூனை: இப்போது நான் புல்லைத் தின்றதும் அதற்காகத்தான். இந்தப் புல் என் வயிற்றுக் கோளாறுக்கு மருந்து. நான்மட்டுமல்ல; நாய்களும் கூடச் சில வேளைகளில் இப்படிப் புல்லைத் தின்பதைக் காணலாம். வயிற்றைப் புரட்டினால் வாயில் விரலைக் கொடுத்துப் பலவந்தமாக வாந்தியெடுக்க முயற்சி செய்வதில்லையா நீங்கள்? இப்படி வாந்தி எடுப்பதற்காக எங்களுக்கு நாங்களே செய்து கொள்ளும் சிகிச்சைதான் இந்தப் புல்லுணவு, பசிக்காக அல்ல.

கிட்டு: 'பூனையும் மருந்துக்காகப் புல்லைத் தின்னும்' என்பதை இப்போது புரிந்து கொண்டேன்.



களில் மாறுபட்டது. சூரியப் பாதையில் உள்ள கிரகங்களுக்கான சந்திரன்களில் நெப்டியூனின் சந்திரனான இந்த டிரிடான்தான் மிகப் பெரியது. இதன் சுழற்சியும் மற்றச் சந்திரன்களின் சுழலும் பாதைக்கு நேர் எதிரானது. டிரிட்டான் நெப்டியூன் கிரகத்திலிருந்து 220,000 மைல் தூரத்தில் அதைச் சுற்றி வருகிறது. நெப்டியூனுக்கு இன்னொரு சந்திரனை 1964ல் **ஜி. பி. கியூப்பர்** என்பவர் கண்டுபிடித்தார். இதற்கு நெரீட் (*Nereid*) என்று பெயரிட்டார். டிரிட்டான் எப்படி மிகப் பெரிய சந்திரனோ அதற்கு நேர் மாறாக இது மிகச் சிறியது. மிகப் பெரிய சக்தி வாய்ந்த டெலஸ்கோப்பினால்கூட இதைக் காணமுடியாது.

நெப்டியூன் கிரகத்தைப் பற்றிய செய்திகள் என்னென்ன?


சூரியனிலிருந்து 2797 மிலியன் மைல்களுக்கப்பால் இருக்கிறது இந்தக் கிரகம். இதன் குறுக்களவு 26,800 மைல்கள். சூரியனை ஒரு தடவை சுற்றி வர நெப்டியூனுக்கு ஆகும் காலம் 168 வருஷங்கள். தன் இருசில் தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள இதற்கு 15 மணியும் 48 நிமிஷங்களும் ஆகின்றன. அதாவது நெப்டியூனில் ஒரு நாள் என்பது சுமாராக பதினாறு மணி நேரம். பருவ நிலை எப்படி? சூரியனிலிருந்து மிக மிக தூரத்திலிருப்பதால் படு பயங்கரமான குளிர். வருணனல்லவா? சராசரி வெப்ப நிலை மைனஸ் 325 டிகிரி ஃபாரன்ஹீட் என்றால் கற்பனை செய்து பாருங்கள்.


சில ஆராய்ச்சியாளர்கள் நெப்டியூன் உருவத்திலும் கனத்திலும் யுரானஸை விடப் பெரியது கனமானது என்கிறார்கள். அமோனியா உலோக வடிவிலோ, திடப் பொருளாகவோ இக்கிரகத்தில் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருக்கும் இங்கு கொஞ்சம் ஜல வாயுவும் காணப்படலாம். தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததால் தாவரங்களும் இருக்க முடியாது. மேல் பரப்பைப் பற்றிய தகவல்கள் ஆராயப்படவில்லை. இக்கிரகத்தில் கெட்டியான பாகங்கள் எங்கு எப்படி உள்ளன என்பதும் அறியப்படவில்லை. சூரிய வெப்பம் வெளிச்சம்? உண்டு. ஆனால் மிக மிகக் குறைவானது, வீர்யமற்றது. மற்றக் கிரகங்களைப் போல இதையும் ஒருவித விஷ வாயு மண்டலம் சூழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பிலிப்ஸ் ஃப்ளுரோஸேண்ட் லாம்புகளின் ஒளித்திறனை நீடிக்க வைப்பது எது?

எலெக்ட்ரோடின் தரம், எமிட்டர் பேஸ்டின் திண்மையும் அளவும், எமிட்டரின் இறுக்கமான ஒட்டும் திறன். இவைதான் ஃப்ளுரோஸெண்ட் லாம்பின் உழைப்பு காலத்தை நிர்ணயிக்கின்றன. அதனால் பிலிப்ஸ், அவர்களது டங்க்ஸ்டன் ஒயர் எலெக்ட்ரோடுகளை இருமுறைகள் அல்லாது, மும்முறைகள் காயில் செய்கின்றனர். அதன் விளைவாக, மிக அதிகமான அளவில் எமிட்டர் பேஸ்ட் அவற்றுள் இணைந்துள்ளது. டங்க்ஸ்டன் ஒயரிலிருந்து ஒளியைத்தரும் காஸுக்கு எலெக்ட்ரான்களைச் செலுத்த ஓர் நல்ல இணைப்புச் சாதனமாக இந்தப் பேஸ்ட் இயங்குகிறது லாம்பின் உழைப்பு காலத்தை நீடிக்க வைக்க இது ஓர் சிறந்த உத்தியாகும்.

ட்ரிப்பிள் காயில்ட் எலெக்ட்ரோட்





பிலிப்ஸ் ஃப்ளுரோஸெண்ட் லாம்புகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வது லாபமளிக்கிறது.

PHL-7164A

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHILIPS

உள்ளங்கை உண்மை ?

மொகலாய மன்னர் அக்பரது சபையில் 'பீர்பல்' என்ற விகட மேதை இருந்தார். அக்பர் அவரை அடிக்கடி ஏதாவது சங்கடமான கேள்வி கேட்பார். பீர்பலும் சற்றும் தயங்காமல் பதில் கூறி அரசரை மகிழ்விப்பார்.

ஒரு நாள் அக்பர், ''எனது உள்ளங்கையில் உரோமம் இல்லாதது ஏன்?'' என்று கேட்டார். சபையில் உள்ளோர் பீர்பல் என்ன சொல்வாரோ என எதிர்பார்த்தனர்.

''ஹுஜூர், நீங்கள் எனக்குத் தானம் கொடுக்க அடிக்கடி கைகளால் பணம் எடுக்கிறீர்கள். பணம் கையில் உராய்வதால் உங்கள் உள்ளங்கையில் உரோமம் முளைக்கவில்லை'' என்று பதில் அளித்தார். இதைக் கேட்ட அக்பர் சந்தோஷமடைந்தார். ஆனால், உடனேயே ''உன்னுடைய உள்ளங்கையில் ஏன் உரோமம் முளைக்கவில்லை?'' என்ற கேள்வியை எழுப்பினார். ''நான் உங்களிடம் தானம் வாங்குவதால் உங்களைப் போலவே என் கைகளிலும் பணம் உராய்ந்து ரோமங்கள் முளைப்பதில்லை'' என்றார் பீர்பல்.

அக்பர் இத்துடன் நில்லாமல், ''அது இருக்கட்டும். இங்கே தர்பாரில் உள்ள

நிலாவில் சிறுவர்கள்!

அருளன்.


அகில உலகம் திரண்டு எங்களை வாழ்த்தி அனுப்ப
அம்புலி நோக்கி எங்களின் விண்கலம் பறந்து செல்லுதே!
அம்பு போல விண்கலம் காற்றைக் கிழித்துப் பறக்குதே!
அன்னை பூமி அழகு எங்கள் கண்ணைப் பறிக்குதே!

உண்மையான நாட்டுப் பற்றை உடலில் ஏற்றியே
உலக நாட்டுச் சிறுவர் நாங்கள் ஒன்று கூடினோம்!
எங்கள் நாட்டுத் தேசக் கொடி நிலவில் பறந்திட
எல்லை யில்லா இன்பத் தோடு நாங்கள் செல்கிறோம்!

கம்பி யில்லாத் தந்தி மூலம் செய்தி வந்ததே!
'தம்பி நீங்கள் பத்திரமா?' என்று கேட்டதே!
'அம்பி முதல் ஆண்ட்ரூ வரை அனைவரும் நலமே'
என்றே நாங்கள் தூது ஒன்றை அனுப்பி வைத்தோமே!

நிலவைச் சுற்றி ஆறு தடவை பறந்து வந்தோமே!
நிலவில் இறங்கத் தக்க இடம் தேர்ந்து எடுத்தோமே!
நிதானமாகத் தரையில் இறங்கி ஓடிச் சென்றோமே!
நாட்டுக் கொடிகள் அனைத்தும் ஏற்றி வணங்கி நின்றோமே!


கூனக் கிழவி எங்கே என்று தேடி அலைந்தோமே!
குன்றைத் தவிர எதுவும் எங்கள் கண்ணில் படலையே!
நீச்சல் அடிக்கக் குளத்தை நாங்கள் தேடிப் பார்த்தோமே!
நெடிய பள்ளக் குழிகள் தவிர நீரைக் காணோமே!




வர்களுக்கும் உள்ளங்கையில் உரோமம் இல்லாதது ஏன்?'' என்றார்.

''மகாராஜ்! இந்த தர்பாரில் உள்ளவர்கள், நீங்கள் எனக்குத் தானம் கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுகிறார்கள். நான் தங்களிடம் தானம் பெறும்போதெல்லாம் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாமல் ஆத்திரத்துடன் இரு கைகளையும் பிசைய ஆரம்பித்து விடுகிறார்கள். அதனால்தான் அவர்களுடைய உள்ளங் கைகளிலும் உரோமம் இல்லை'' என்று சொன்னார்.

இதைக் கேட்ட அக்பர் சந்தோஷமடைந்து பீர்பலுக்கு நிறைய வெகுமதிகள் தந்தார். —சு. குருஸாமி ஐயர்





அடித்து எகிறின பந்து போல நமது பூமியும்
அழகுக் கோலம் பூண்டு எங்கள் கண்ணில் பட்டதே!
இங்கே யிருந்து 'செவ்வாய்' செல்ல நாங்கள் நினைக்கையில்
'இறங்கி வாங்க தம்பீர்!' என்ற செய்தி வந்ததே!

ஓடி நாங்கள் ஏறிக் கொண்டோம் விண் கலத்திலே!
ஒருவன் மட்டும் தப்பி விட்டான் நிலாத் தரையிலே!
''ஐயோ! அம்பி! நானும் வாரேன் போயி டாதீங்க
அங்கே வந்து 'சாக்லெட்' தாரேன்'' என்று அழுதானே!


பாவம்! என்று சொல்லிக் கொண்டே அவனை ஏற்றினோம்!
பாட்டுப் பாடிக் குழல் ஊதி பூமி நோக்கினோம்!
பாதி வழியில் வந்த போது பயணம் நின்றதே!
பயந்து விட்ட நாங்கள் உடனே தூது சொன்னோமே!

'தம்பி! நீங்கள் யாரேனும் கதவைத் திறந்து இருப்பீர்கள்!
தயவு செய்து மூடினால் தானே ஓடும் விண்கலம்!'
கம்பி சேதி வந்ததும் திரும்பி அங்கே பார்த்தோமே!
கதவைத் திறந்து வெளியிலே சீனுத் தம்பி போனானே!

'சீனுத் தம்பி 'சியாங்கே' கதவை மூடி வாயேண்டா
சீறிப் பறக்கும் விண்கலம்!' என்று சொல்லிக் கேட்டோமே!
சீக்கிரம் உள்ளே வந்தவன் கதவை மூடி விட்டானே!
சீறிப் பறந்த விண்கலம் சிதறி உடைந்து போச்சுதே!

கதையைக் கேட்ட தம்பி யர்க்கு நல்ல சந்தோஷம்!
கனவில் கண்ட காட்சி இதே! நம்பி டாதீங்க!
காலை நேரம் தினம் எழுந்து குளித்துப் பழகினால்
கண்ட கனவு அப்பொ மூதே ஓடிப் போயிடும்.


ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்:
15
சம்பாதி மேலும் கூறியது.
நிசாகரர் என்ற முனிவர் 'ராமகாரியமாக வானர தூதர்கள் இங்கு வரும்போது உன் பழைய நிலையை நீ அடைவாய்' என்றார். அதன்படி இதோ என் கண் பார்வை தீட்சண்யம் பெற்று விட்டது. இறக்கைகள் முளைத்து விட்டன.
சம்பாதி ஜடாயுவைப் பற்றிய விவரத்தை வானரங்களிடமிருந்து அறிந்து கொண்டதும் கிர்ரென்று வானத்தில் கிளம்பி...
வானரங்களே! கவலையை விடுங்கள். அதோ கடலில் நூறு யோஜனைகளுக்கு அப்பால் ஒரு நகரம் தெரிகிறது. அங்கே ஒரு மரத்தடியில் ஒரு மாதரசி....
இலங்கையையும் அங்கு சிறைப்பட்டுள்ள சீதையையும் இங்கிருந்தே கண்டு கூறி விடுகிறது சம்பாதி.
உங்கள் ராமனிடம் போய் இதைச் சொல்லிப் படையுடன் வந்து இலங்கையை முற்றுகையிட்டுச் சீதையை மீட்டுக் கொள்ளச் சொல்லுங்கள். நான் வருகிறேன்.
தோழர்களே! அதிக மகிழ்ச்சியடையாதீர்கள். கழுகின் வார்த்தையைக் கேட்டு நாம் திரும்பக்கூடாது. நம்மில் யாராவது நேரில் போய்ப் பார்த்து வரவேணும்.
அதுவே சரி, நூறு யோஜனை கடலைத் தாண்டுவது எப்படி? யாரால் முடியும்?
ஏன் முடியாது? எனக்குப் பழைய சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. அதோ ராம ஜெபம் செய்து கொண்டிருக்கிறானே, அவன் பிறந்தவுடனே சூரியனைப் பிடிக்கத் தாவியவனாயிற்றே!


அனுமனின் இளமைப் பருவத்துச் சாதகங்களையும் சாபத்தையும் ஜாம்பவான், விளக்கிட, வானரர்கள் மாருதியைச் சூழ்ந்து கொண்டு அவர் புகழ் பாட, அஞ்சனை மைந்தனின் உருவம் மேருமலையென வளர்ந்து உயருகிறது.
அனுமனுக்குத் தன் பலமும் நினைவும் திரும்பியதும் ஒரு மலையுச்சியில் ஏறி நின்று சிங்கநாதம் செய்கிறார்.
ஐயன் அருளால் வெற்றியோடு கரையில் திரும்புவேன். அதுவரை இங்கேயே இருங்கள். ஜெய் ஸ்ரீராம்!
அனுமான் ஆகாயத்தில் கிளம்பியதும் சண்ட மாருதம் மூண்டது, விலங்குகள் பீதியடைந்து ஓடின. மரங்களிலுள்ள இலைகளும் மலர்களும் உதிர்ந்தன.
மாருதி விண்ணிலே பாய்ந்த வேகத்தில் மலை மீதிருந்த மரங்கள் வேரோடு பெயர்ந்து அவரோடு சிறிது தூரம் சென்றபின் கடலில் விழுந்தன. கடல் நீர் சுழன்று மேலே பொங்கியது...
மைநாக மலையே! நெடுநேரமாக மூச்சையடக்கிப் பறந்து வருகிறான் அனுமான். அவன் சற்று இளைப்பாறி ஓய்வுபெற நீ அவன் பாதையில் உயர்ந்து நில். உன் மீது அவன் சற்று அமர்ந்து ஆசுவாசமடையட்டும்.
அப்படியே செய்கிறேன் பிரபு!
தொடரும்



நம்மைப் பற்றி நமக்குத் தெரியாதவை

சுகந்தி

1. ஒரு வார்த்தை பேச நாம் நம் உடலில் உள்ள 72 தசைகளை இயக்க வேண்டும். அப்பொழுது தான் வாயிலிருந்து ஒரு வார்த்தை வரும்.

2. கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு நம்மால் தும்மவே முடியாது.

3. ஒவ்வொரு முறை நாம் சுவாசிக்கும் போதும் 30 கன அங்குலக் காற்றை நாம் உள்ளே இழுக்கிறோம்!

4. நாம் சாப்பிடும் ஆகாரம் வாயினுள் ஒரு நிமிஷத்துக்குக் குறைவாகவும் இரைப் பையில் மூன்று மணி நேரமும், சிறு குடலில் பத்து மணி நேரமும் தங்குகிறது.

5. நம் உடலில் 59 சதவிகிதம் நீர் இருக்கிறது. இரத்தத்தில் 80 சதவிகிதம் நீர் உள்ளது.

6. நம் உடலில் மிக நீளமானதும் பெரியதுமான எலும்பு எங்கே இருக்கிறது தெரியுமா? தொடை எலும்புதான்.

7. முப்பது வயதுக்கு மேல் தலையில் முடி புதிதாக வளராது. வளர்ந்திருப்பதுதான் வளரும்.

8. நம் மூளையின் எடை 3 பவுண்டு.

9. நம் உடம்பில் 527 தசைகள் உள்ளன. கால்களில் மட்டும் 108 தசைகள் உள்ளன.

10. நம் உடலில் இரத்தம் ஒரு நாளைக்கு 1680 லட்சம் மைல் தூரம் பிரயாணம் செய்கிறது.

11. நாம் கோபம் கொள்ளும் போது 50 தசைகளும் சிரிக்கும்போது 13 தசைகளும் இயங்குகின்றன.

12. நாடித் துடிப்பு என்பது இதயத் துடிப்பு தான்.

13. குளிர்காலத்தை விடக் கோடை காலத்தில் தான் நமக்கு ஞாபக சக்தி அதிகம்.

14. காதுகளில் ஒலியை உணர ஒருலட்சம் செல்கள் உள்ளன.

15. நம் விரலில் உள்ள நகம் ஒரு வருஷத்தில் இரண்டரை அங்குல நீளம் வளருகிறது.

16. இருமலின் வேகம் மணிக்கு 245 மைல்களாகும்.

17. நாம் சாப்பிடும் பொழுது சாப்பாட்டுடன் சென்றுவிடும்காற்று வயிற்றில் இருக்க இடமில்லாமல் வெளியே வரும் பொழுது உண்டாகிற சத்தமே ஏப்பம்!

18. முதுகின் பக்கம் படுக்கிற ஜீவன் மனிதர்களாகிய நாம்தான்!

19. 12 வயதுக்குள் விழும் பற்கள் மட்டுமே மீண்டும் முளைக்கும்.

20. தூங்கும்பொழுது அடி நாக்கையும், அதையடுத்த மிருதுவான இடங்களையும் கட்டுப்படுத்தும் தசைகள் ஓய்வு கொள்கின்றன. அப்போது மூக்கு, வாய் இவற்றின் வழியாகத் தொடர்ந்து மூச்சு விட வேண்டியிருக்கிறது. இரண்டு பக்கங்களிலிருந்தும் வரும் மூச்சுக் காற்றினால் அந்தத் தசைகள் அசைகின்றன. அப்போது சத்தம் உண்டாகிறது. அதைத்தான் நாம் குறட்டை என்கிறோம்.

21. இமைக்கும் நேரம் என்பது ஒரு செகண்டில் பத்தில் மூன்று பாகமேயாகும்.

22. ஆணைவிடப் பெண்ணின் மூளையே நிறை அதிகம்.

23. சாப்பிட்ட சாப்பாடு முழுவதும் பயன் படுத்தப்பட்டு மேலும் உணவு தேவை என்பதை நரம்புகள் மூலம் தெரிய வரும் உணர்வுதான் பசி என்பது.

24. அன்னப் பாதையின் நீளம் வாயிலிருந்து ஆசன வாய் வரை சுமார் 30 அடி இருக்கும்.

25. ஒவ்வொரு நிமிஷமும் ஆறு அவுன்ஸ் ரத்தத்தை இறைக்கும் இருதயம்தினந்தோறும் மூவாயிரம் காலன் ரத்தத்தை உடலின் பல ஆயிரம் மைல் நீளமுள்ள ரத்தக் குழாய்கள் வழியே இறைக்கிறது.

26. நாம் தூங்கத் தொடங்கியதும் முதலில் கண்கள், பிறகுவாசனையை அறியும் உறுப்புக்கள், பின்பு சுவை மொட்டுகள், காது, கடைசியாகத் தோல் ஆகியவை வரிசைக் கிரமமாகத் தூங்குகின்றன.

27. மூளைக்குத் தேவையான பிராண வாயுவின் அளவு குறையும் பொழுது மூளை பிராணவாயுவைப் பெற முயற்சி செய்கிறது. சில நரம்புகளைத் தூண்டிவிட்டு வாயை அகலத் திறக்கவைத்து அதிகமான காற்று உட்புக வசதி செய்கிறது. இதுவே கொட்டாவி.

28. உடலின் உஷ்ணம் அதிகமாகப் போய்விடாமல் சம நிலைப்படுத்தவே வியர்வை உண்டாகிறது.

29. உடலில் உண்டாகும் உஷ்ணம் வெளியேறி விடாமல் தடுக்கவே ரோமம் உண்டாகிறது.

30. அதிர்ச்சியினால் ரத்தக் குழாய்கள் சுருங்குகின்றன. அதனால் மூளைக்குப் போதுமான ரத்தம் போக வழி தடைப்படுகிறது. அதனால் மூர்ச்சை போடுகிறது.

31. நகமும் ரோமமும் வளர்வதால் அவைகள் உயிருள்ளவையே. அவற்றில் நரம்புகள் கிடையாததால் அவைகளைக் கத்திரிக்கும்பொழுது வலி ஏற்படுவதில்லை.

32. அடிபட்ட இடத்தில் தோலிலும் தசையிலுமுள்ள நுண்ணிய ரத்தக் குழாய்கள் பழுதடைகின்றன. அப்போது அவற்றின் வழியே இரத்தம் ஓடாமல் தேங்கிவிடுகிறது. அதனாலேயே அடிபட்ட இடம் வீங்கித் தோன்றுகிறது.

33. குளிர்காலத்தை விடக் கோடை காலத்தில் தான் நமக்கு அதிகம் களைப்புஏற்படும். காரணம் இரத்தம் கோடையில் அசுத்தமாவதால்தான்.

34. நம் இரத்தத்தின் உஷ்ணம் அதிகரித்தால் பிதற்றுவோம். சீதளம் அதிகமானால் சாகும் பொழுதுகூட சந்தோஷமாயிருப்போம். இரத்தத்திலிருந்து பிராணவாயுவை வெளியேற்றினால் பகுத்தறிவு போய்விடும். சுண்ணாம்புச் சத்தை அரைப் பகுதி நீக்கினால் பிரக்ஞை தவறி இறந்து போவோம். சுண்ணாம்புச் சத்து இருமடங்கானாலும் இரத்தம் தடித்துப் போய் ஓடாமல் நின்றுவிடும்.

35. மணிக்கட்டிலிருந்து நடுவிரல் நுனி வரை உள்ள நீளமும், மோவாய்க் கட்டையிலிருந்து நெற்றி உச்சி வரை உள்ள நீளமும் எல்லோருக்கும் சமமாக இருக்கும்.

36. கண்களை மூடிக்கொண்டு நம்மால் நேராக நடக்க முடியாது.



மன்னிப்பு

ஞான வைத்தியநாதன்





செல்லப்பனுக்கு வயது பன்னிரண்டு. அவனுக்கு நினைவு தெரிவதற்குள்ளாகவே அவனுடைய அம்மாவும் அப்பாவும் இறந்து விட்டார்கள்.

இப்போது அவனுக்குத் துணையாக இருப்பது, அவன் அப்பாவைப் பெற்ற தாத்தா - குரங்காட்டி வேலப்பன் மட்டுமே!

வேலப்பன் செல்லப்பன் மேல் மிகவும் அன்பாக இருந்தான். குரங்கு ராமையாவும் அவனும் சேர்ந்து செல்லப்பனைக் கவனித்துக் கொண்டார்கள்.

தினமும் செல்லப்பன் தாத்தாவோடும் குரங்கோடும் தெருத் தெருவாக அலைவான். வீட்டின் முன்னால் குரங்கை வைத்து அவர்கள் வேடிக்கை காட்டுவார்கள். அதில் கிடைக்கும் காசைக் கொண்டு பசியைப் போக்கிக் கொள்வார்கள்.

அப்படித்தான் தெரு முனையில் இருந்த அந்தப் பெரிய வீட்டின் முன், வேலப்பனுக்கும் செல்லப்பனுக்கும் நல்ல பசி. நான்கு நாட்களாகவே வானம் பொத்துக் கொண்டு மழை பெய்ததால் வருமானம் இல்லை.

பசி வயிற்றைப் பிசைந்தது. கிழவன் வேலப்பன் ஈனஸ்வரத்தில், "அம்மா! பிச்சை!" என்று மெல்லக் கத்தினான்.

நல்ல வேளை! அப்போது வீட்டினுள்ளே இருந்து ஒரு நான்கு வயதுப் பெண் குழந்தை ஓடி வந்தது.

அந்தக் குழந்தையைக் கண்டதும் கிழவனுக்கு உற்சாகம் வந்து விட்டது. பசியால் துவண்ட உடம்பை நிமிர்த்திக் கொண்டு குரங்கிடம், "ராமையா! ஜோரா லங்கையைத் தாண்டுடா!" என்று கைக் கழியை நீட்டினான்.

குரங்குக்கும் குழந்தையைக் கண்டு உற்சாகம் வந்து விட்டது. அது ஜோராகக் கழியைத் தாண்டிக் குட்டிக்கரணம் போட்டது.

கிழவன் வேலப்பன் குரங்கு ராமையாவை லங்கையைத் தாண்டச் சொல்லி வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். செல்லப்பன் தகர டப்பாவில் தாளம் போட்டுக் கொண்டிருந்தான்.

நல்ல மதிய நேரம். வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. இன்னும் குரங்கு ராமையாவின் லங்கை தாண்டும் வேடிக்கையைப் பார்க்க வீட்டிலிருந்து யாருமே வரவில்லை.

வேலப்பன் அதைக் கண்டு வீட்டின் உள்பக்கம் பார்த்து, "தோ...தோ, ராமையா! லங்கையை இன்னும் ஒரு தரம் ஜோராத் தாண்டுடா. எசமான் வந்து காசு போடுவாரு... அம்மா வந்து பிச்சை போடுவாங்க. ம்... இன்னும் ஒரு தரம் ஜோராத் தாண்டுடா!" என்று கத்தினான்.

குரங்கு மீண்டும் மீண்டும் லங்கையைத் தாண்டியது. யாருமே அந்த வேடிக்கையைப் பார்க்க வீட்டிலிருந்து வெளியே வரவில்லை.

செல்லப்பன் தகர டப்பாவில் மேளம் தட்டினான்.

வெளியே வந்த பெண் குழந்தை அதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தது. அப்போது அதன் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியும், கைகளில் அணிந்திருந்த தங்கக் காப்புகளும் வெய்யில் பட்டு மின்னின.


அந்தக் கள்ளமற்ற சிரிப்பைப் பார்த்துக் கிழவன் சிரித்தான். செல்லப்பன் மேளம் தட்டுவதை நிறுத்தாமல் தானும் சிரித்தான், ராமையாவும் பல்லை இளித்தது.

"டேய்! அங்கே யாருடா?"—கோபமாகக் குரல் முன்னே வர, பின்னே வந்தார் வீட்டுக்காரர்.

அவரைப் பார்த்துக் கிழவன் எழுந்து நின்று "எஜமான்! குரங்காட்டிங்க... பிச்சை..!" என்று பல்லைக் காட்டினான்.

"சீ, நாய்ங்களா பிச்சையும் கிடையாது, ஒண்ணும் கிடையாது. போங்க!" என்றார் வீட்டுக்காரர். பிறகு தம் குழந்தையைப் பார்த்து விட்டு வேலப்

பனிடம் திரும்பவும், ''குரங்காட்டி என்று வர்றது, ஏமாந்தாக் குழந்தையைப் பிடிச்சுக்கிட்டுப் போயிடறது. மரியாதையாப் போங்கடா. இல்லே, உங்களைப் போலீசிலே ஒப்படைச்சுடுவேன்!'' என்று கத்தினார்.



வேலப்பனும் செல்லப்பனும் வீட்டுக்காரர் கத்தியதைக் கேட்டுப் பயந்து விட்டார்கள். ஆனாலும் பசியால் வாடும் இருவரும், ''நாங்க பிள்ளை பிடிக்கறவங்க இல்லை எசமான்!'' என்று சொன்னார்கள்.

அவ்வளவுதான்; வீட்டுக்காரருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. அவர் கிழவனின் கைக் கழியைப் பிடுங்கி, அவர்களை நையப் புடைத்தார்.

வேலப்பனும் செல்லப்பனும் . அடி தாளாமல் துடித்துப் போய் அங்கிருந்து ஓடினார்கள். குரங்கும் அவர்களைத் தொடர்ந்து 'க்ரீச்... க்ரீச்...'' என்று கத்திக் கொண்டு ஓடியது.

கிழவனுக்கு நல்ல அடி. உடம்பெல்லாம் வீங்கிப் போய் விட்டது. எழுந்திருக்க முடியாமல் அவன் கிழிந்த கோரைப் பாயில் கிடந்தான். அப்படியே காய்ச்சலில் பிதற்றிக் கொண்டிருந்தான்.

செல்லப்பன் தாத்தாவைப் பார்த்தான். நேற்று மத்தியானம் நடந்த சம்பவம் அவன் நினைவுக்கு வந்தது. அவனுக்கு அந்த வீட்டுக்காரர் மேல் ஆத்திரம் வந்தது. கூடவே தாத்தா நிலை நினைவுக்கு வந்து அழுகையைப் பொங்க வைத்தது. அழுது விட்டான்.

குரங்கு ராமையா செல்லப்பன் அழும் காரணத்தைப் புரிந்துகொண்டது. உடனே அது செல்லப்பனைப் பார்த்து 'க்ரீச்' என்று அன்போடு கத்தியது.

அந்தச் சத்தம் கேட்டு வேலப்பன் சற்றே கண்களைத் திறந்தான். செல்லப்பனைப் பார்த்தான். தன்னைப் போலவே ராமையாவும் செல்லப்பனும் பசியால் துடிப்பது அவனுக்குப் புரிந்தது.

உடனே வேட்டி முனையில் முடிந்திருந்த பத்துக் காசை எடுத்துச் செல்லப்பனிடம் கொடுத்தான். பிறகு, மெல்லிய குரலில், ''செல்லப்பா! போய் டீ வாங்கி வா. மூணு பேரும் கொஞ்சம் குடிக்கலாம்!'' என்றான்.

''சரி தாத்தா!'' செல்லப்பன் தலையாட்டிவிட்டுத் தகர டப்பாவை எடுத்

துக்கொண்டு குடிசைக்கு வெளியே வந்தான், டீக்கடைக்குப் போக.

செல்லப்பன் அந்தப் பாழடைந்த சத்திரத்துக்கு அருகில் வந்தபோது, யாரோ ஒருவன் ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு வருவது தெரிந்தது. சட்டென்று அவனுக்கு ஒரு சந்தேகம். கூர்ந்து பார்த்தான். அந்தக் குழந்தை— 'இது அந்த வீட்டுக் குழந்தையாச்சே!'

குழந்தையின் கழுத்தில் தங்கச் சங்கிலியும் கைகளில் தங்கக் காப்புகளும் இருந்தன!

அப்போது அவனுக்கு நேற்று அந்த வீட்டுக்காரர் சொன்னது நினைவுக்கு வந்தது. 'குரங்காட்டின்னு வர்றது, ஏமாந்தா குழந்தையைப் பிடிச்சுக் கிட்டுப் போயிடறது!...'

செல்லப்பனுக்குப் புரிந்து விட்டது. 'அந்தக் குழந்தையை இந்த ஆள் பிடிச்சுக்கிட்டு வந்திருக்கிறான்!'..... அவ்வளவுதான்; அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே செல்லப்பன் அந்த ஆளைக் கவனிக்காததுபோல் மேலே நடந்தான்.

வீறிட்டு அழுகின்ற குழந்தையை இறுக்கமாகத் தூக்கிக் கொண்டு அந்த ஆள் சத்திரத்துக்குள் நுழைந்ததைக் கண்டதும் செல்லப்பன் ஓடத் தொடங்கினான். நாலைந்து தெருக்களைக் கடந்து ஓடினான். கடைசியில் அவன் தெரு முனையில் உள்ள அந்த வீட்டுக்கு ஓடி வந்து நின்றான். வீட்டின் உள்ளே பரபரப்போடு பார்த்து, ''எஜமான்!... ஓடியாங்கோ... ஓடியாங்கோ!'' என்று கத்தினான்.

வீட்டுக்காரர் அவன் கத்தலைக் கேட்டு வெளியே வந்தார். அவனைக் கண்டதும், நேற்றைய சம்பவம் அவருக்கு நினைவு வந்தது. ''என்னடா, பரதேசிப் பயலே!'' என்று கோபத்தோடு கத்தினார்.

செல்லப்பன் அவர் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. ''சாமி! உங்க குழந்தையை ஒருத்தன் தூக்கிக்கிட்டு ஊர்க் கோடிச் சத்திரத்துக்குள்ளே போனான். அதைப் பார்த்து விட்டு உங்ககிட்டே சொல்ல ஓடியாந்தேன். எசமான்!'' — சொல்லி முடித்தபோது செல்லப்பனுக்கு மூச்சு வாங்கியது.

''என்ன?.... ஏன் குழந்தையா?'' வீட்டுக்காரர் செல்லப்பன் கூறியதைக் கேட்டு அதிர்ந்து விட்டார். அவர் உடம்பு பெற்ற பாசத்தால் நடுங்கியது.

''ஆமாஞ்சாமி!''

வீட்டுக்காரர் மறு விநாடி சமாளித்துக் கொண்டார். ''டேய், தம்பி, எங்கே, வந்து காட்டு!'' என்று கூறிக் கொண்டே வீட்டை விட்டுத் தெருவில் இறங்கி வேகமாக நடந்தார்.

செல்லப்பன் அவரைப் பின் தொடர்ந்து ஓடினான்.

அவர்கள் அப்படி ஓடும்போது எதிரே இரண்டு போலீஸ்காரர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் வீட்டுக்காரர், அவர்களிடம் ஓடிப்போய் விஷயத்தைச் சொன்னார்.

''அப்படியா? வாங்க, போகலாம்!'' என்ற போலீஸ்காரர்களும் அவர்களுடன் சேர்ந்துகொள்ள எல்லோரும் சத்திரத்தை நோக்கி விரைந்தார்கள்.

அவர்கள் சத்திரத்துக்குள்ளே நுழையும்போது, அந்தக் குழந்தைத் திருடன் குழந்தையின் தங்கச் சங்கிலியைக் கழற்றிக் கொண்டிருந்தான். உடனே போலீஸ்காரர்கள் அவனை வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள்.

வீட்டுக்காரர் ஓடிப் போய்க் குழந்தையைத் தூக்கிக் கொண்டார்.

செல்லப்பன் அந்தக் காட்சியைப் பார்த்து மகிழ்ந்தான்.

சற்றுநேரம் குழந்தையை அன்போடு அணைத்திருந்த வீட்டுக்காரர், செல்லப்பனின் நினைவு வரவே அவன் பக்கம் திரும்பினார். ''தம்பி! நேற்று உன்னையும் உன் தாத்தாவையும் பிள்ளை பிடிக்கிறவர்கள் என்று அடித்துத் துரத்தினேன். நீயோ இன்னிக்கு அதற்குப் பழி வாங்காமல் என் குழந்தையைக் காப்பாற்றிட்டே! தம்பி, இந்தா! வைச்சுக்கோ!'' என்று சொல்லிச் சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினார்.

செல்லப்பன் பணத்தை வாங்கிக் கொள்ளவில்லை. அவரை ஏறிட்டுப் பார்த்து, ''எசமான்! நாம் எப்போதும் யாருக்கும் ஒரு தீங்கும் செய்யக் கூடாது. கெடுதல் செய்தவங்களுக்கும் நல்லதே செய்யணும். அப்போதான் கடவுள் நம்மைப் பாராட்டுவாரு..... ஆமாம், சாமி. மன்னிக்கத் தெரிந்த உள்ளம்தான் கடவுளின் கோயில்! இது என் தாத்தா எனக்குச் சொல்லிக் கொடுத்த பாடம் எசமான்! ம்...நான் வர்றேன்!'' என்று சொல்லி விட்டுச் செல்லப்பன் தாத்தாவுக்கு டீ வாங்கிக் கொண்டு போக, சத்திரத்தை விட்டு வேகமாக வெளியேறினான்.

வீட்டுக்காரர் அந்தச் சிறிய உள்ளத்திலிருந்த பெரிய குணத்தைப் புரிந்து கொண்டு வியந்து நின்றார். அவர் கண்கள் கலங்கின.

மந்திரக்கம்பளம் 7



கீர்த்தியின் எண்ணத்திலே ஒரு மின்னல் பாய்ந்ததல்லவா? இத்தனை நேரமாக அவனுக்கு விசித்திரமாக விபரீதமாகத் தோன்றிய செயல்களும் காட்சிகளும் ஏன் எதனால் என்பதற்கான காரணம் அவனது மூளையில் பளீரென்று உதயமாயிற்று. 'நிஜமாகவா ? அப்படியும் இருக்குமா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அவன் மனம் இப்போதைப் போல் என்றுமே படபடத்ததில்லை. தலை மீது உள்ள குல்லாயைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். இடையிலிருந்த பையை அவன் கைகள் அவனை அறியாமல் ஸ்பரிசித்தன. தலைநகரிலுள்ள தன் அரண்மனையின் வடக்குக்கோட்டை வாசல் உப்பரிகை மீதுள்ள அறைக்குப் போனதிலிருந்து இது வரை நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நினைவுபடுத்திக் கொண்டான் கீர்த்தி. அவன் உடல் சிலிர்த்தது.

''ஒதுக்கப்பட்ட அந்த அறையில் குவிக்கப்பட்டிருந்த பொருள்களெல்லாம் மந்திர சக்தி வாய்ந்தவைகளா ? நான் அணிந்திருக்கும் குல்லாய், எடுத்து வந்த பை, போட்டுக் கொண்டிருக்கும் காலணி.....? ஆமாம், அப்படித்தான் இருக்க வேண்டும். மங்களகிரி உணவு விடுதிக்குப் போக வேண்டும் என்று நினைத்து நாலு தப்படி நடந்த உடனேயே இங்கிருந்தேனே! எனக்கு இருந்த பசியில் அது எப்படிச் சாத்தியமாயிற்று என்று நான் அப்போது யோசிக்கவில்லை. உணவு விடுதியிலும் மங்களகிரி வீதியிலும் நடந்த குளறுபடிகளுக்கும் என்னை மக்கள் உதாசீனப்படுத்துவதாக நினைத்ததற்கும் காரணம், அவர்கள் கண்களுக்குத் தெரியாமல் என் உருவம் ஏதோ ஒரு மாய சக்தியால் மறைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். அது நான் அணிந்திருக்கும் இந்தக் குல்லாயின் மகிமையாக இருக்குமோ ? இருக்கத்தான் வேண்டும். குல்லாய் தவறி விழுந்த போதோ, நானாக அதை எடுத்த போதோ என்னைப் பிறர் கண்டிருக்கிறார்கள் அதனால்தான் திடீரென்று தோன்றித் திடீரென்று மறையும் என்னைக் கண்டு அவர்கள் பீதியடைந்தார்களோ ?

கீர்த்திக்கு மூன்று தங்கக் காசுள்ள பையின் நினைவு வந்தது. ''உணவு விடுதி உரிமையாளருக்குக் கொடுத்த பிறகும் அதில் மூன்று நாணயங்கள் அப்படியே இருந்தனவே. கிழவியிடம் கொடுத்த பிறகும் இதில்.....?'' பரபரப்புடன் பைக்குள் கையைவிட்டான். அவன் விழிகள் வியப்பினாலும் புதியதோர் அனுபவத்தாலும் விரிந்தன. பைக்குள் மூன்று நாணயங்கள் கலகல என்று அவன் கைகளில் பட்டுச் சிரித்தன.

''அப்படியானால்....? இத்தனை நாட்களாக நான் எண்ணி வந்த முடிவு தவறானது. அம்மா கூறியது அசட்டுத்தனம். மந்திரங்கள் உண்டு. மாயங்கள் நடக்கும்.... அற்புதங்கள் நிகழும். மந்திரவாதியும் மந்திரப் பொருள்களும் உண்டு! புராதனப் புத்தகங்களில் அதைப் பற்றிப் படித்தபோதெல்லாம் நம்பிக்கைப்படாமல் நகைத்தேனே ? அது எத்தனை அசட்டுத்தனம் ? இதோ இங்கே நான் எல்லோரையும் பார்க்கிறேன். ஆனால் என்னை யாரும் காணாதபடி மறைந்திருக்கிறேனே. இந்த அதிசயம் மந்திர சக்தியினால்தானே?'' இப்படி நடந்தவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து வரிசைப்படுத்தியபோது கீர்த்தி வாய் விட்டுக் கடகடவென்று சிரித்தான். தன்னை மறந்து, சூழ்நிலையை மறந்து வெறி பிடித்தவனைப் போலச் சிரித்தான். அவனுடைய சிரிப்பொலி கேட்டுக் கூடத்திலிருந்தவர்கள் திடுக்கிட்டார்கள், திகைத்தார்கள். நாலா

வாண்டுமாமா

பக்கமும் தவிப்போடு திரும்பிப் பார்த்தார்கள், இப்படிச் சிரிக்கும் ஆள் யார் என்பதை அறிந்து கொள்ள. ஆனால் யாரையும் அவர்களால் காண முடியவில்லை.

வியப்பும் திகைப்பும் அடங்கித் தெளிவு பிறந்த பிறகே கீர்த்தி தான் சிரிப்பதை நிறுத்தினான். தன் நிலைக்கு வந்த அவனுக்கே அவன் செயல் வெட்கத்தைக் கொடுத்தது. இந்நாட்டின் வருங்கால மன்னனாகிய தான் இப்படி அநாகரிகமாகச் சிரித்ததை எண்ணிய போது என்னவோ போலிருந்தது. அங்கு கூடியிருந்தவர்களை யெல்லாம் தன் உருவமற்ற சிரிப்பு கலவரப்படுத்தி இருப்பதைக் கண்டான். இவர்களிடம் நான் என்னை வெளிப்படுத்திக் கொண்டு என் செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் என்ன?' என்ற எண்ணம் ஏற்பட்டது. அவன் நல்லவன். பிறருடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பும் மரியாதையும் தரக்கூடிய பண்புடையவன்.

கீர்த்திக்கு உடனே இன்னொரு விஷயமும் நினைவுக்கு வந்தது. சட்டென்று தன்னைக் குனிந்து பார்த்துக் கொண்டான். ஒரு பெரிய நாட்டின் இளவரசன், கௌரவமிக்க பலர் கலந்து கொள்ளக்கூடிய ஒரு விருந்து மண்டபத்திலோ, கேளிக்கை நிகழ்ச்சிகளிலோ தோன்றுவதற்கு ஏற்ற உடையிலே தான் இல்லாதிருப்பதை அறிந்தான். படுக்கைக்குச் செல்லும் போது அணிந்து கொள்ளும் மிகச் சாதாரண உடையில் இருந்தான் கீர்த்தி. 'இந்தக் கோலத்தில் என்னைப் பற்றி மிக உயர்வாகக் கருதிக் கொண்டிருக்கும் அந்த அழகியின் முன்னால் தோன்றக் கூடாது' என்ற முடிவுக்கு வந்தான். கன்னத்தில் குழி விழ யாருடனோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் அந்த அழகி. அவள் மீது பதிந்த தன் பார்வையை மீட்டுக் கொள்ள முடியாமல் சில நிமிஷங்கள் அவள் சிரிப்பை, அழகை, அசைவையே பார்த்துக் கொண்டிருந்தான் கீர்த்தி. 'எந்தப் பெண்ணிடமும் என் மனம் இவ்வளவு ஈடுபாடு கொண்டதில்லையே? இது என்ன விந்தை ?' என்ற வினாவையும் அவன் உள் மனம் எழுப்பிக் கொண்டிருந்தது. ஆனாலும் அவள் அழகில் லயிக்கும் தன் கண்களை அவனால் மீட்க முடியவில்லை.

மந்திர சக்தியால் மறைந்திருந்து மக்களை இன்னமும் குழப்பத்திலாழ்த்த விரும்பாத கீர்த்தி உடனே அந்தக் கூடத்தை விட்டு ஒதுக்குப்புறமான ஓர் இடத்துக்கு வந்தான். தான் அணிந்திருக்கும் காலணிகளைக் குனிந்து பார்த்துக் கொண்டான். 'இதற்குத்தான் என்ன அற்புத சக்தி ? நினைத்த இடத்துக்குச் சில விநாடிகளில் கொண்டு போய் விட்டுவிடுகிறதே' என்று எண்ணி வியந்தவன், ''நான் என்னுடைய விசித்திரபுரி அரண்மனையின் வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகையில் உள்ள அந்த மந்திரப் பொருள்கள் அடங்கிய அறையில் இருக்க வேண்டும்'' என்று நினைத்து மூன்றே தப்படிகள் வைத்தான். அவ்வளவுதான். அடுத்த சில விநாடிகளில் கீர்த்தி, புழுதியும் ஒட்டடையும் படிந்த அந்த ஒதுக்குப்புறமான உப்பரிகையின் அறைக்குள் இருந்தான். அப்போது மாலை மயங்கி இருள் கவியும் நேரமாகி இருந்தது.


அந்த அறையில் சிதறிக் கிடந்த பொருள்களை இப்போது அவன் அதிக அக்கறையுடன் நோட்டம் விட்டான். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் மந்திர சக்தி வாய்ந்தவை என்ற எண்ணம் அவன் உடலைச் சிலிர்க்க வைத்தது. 'ஏதோ ஒரு கோபத்தில் மந்திரங்களே கிடையாது' என்று அம்மா கூறி இருக்க வேண்டும். நானும் அதை இத்தனை கலபமாக நம்பிக் கொண்டிருந்தேனே' என்று எண்ணிய கீர்த்தியின் முகத்தில் புன்முறுவல் படர்ந்தது.

மேஜை மீது இன்னொரு தலைப்பாகை இருந்தது. சலங்கைகள் கட்டி ஜரிகை வேலைப்பாடுகளுடன் அழகாக இருந்தது அந்தத் தலைப்பாகை. உருவத்தை மறைக்கும் தான் அணிந்திருந்த தலைப்பாகையைக் கழற்றிவிட்டு அந்தப் புதிய தலைப்பாகையை அணிந்து கொண்டான். அந்த அழகியின் முன்னால் சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளப் போகிறேன். அதற்கேற்ற வகையில் ஒரு ராஜகுமாரனுக்கு உரிய கம்பீரமான கவர்ச்சிமிக்க உடையலங்காரத்துடன் நான் விளங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். விரும்பியதை விரும்பியபடி அளிக்கும் விசித்திரத் தலைப்பாகை அது. ஆகவே அடுத்த விநாடியே கீர்த்தி அற்புதமான அழகான ராஜ கம்பீரமான ஆடையலங்காரங்களுடன் விளங்கினான். நவரத்தினங்களும், பொன்னும், பட்டும் பகட்டுமாக வைத்து இழைத்திருந்தன, உடைகளிலும் அணிகளிலும். காண்போரின் கண்களை அகல விரியச் செய்



யும் அபூர்வமான வேலைப்பாடமைந்த உடைகள். ஆனால் காலிலே மட்டும் அந்தப் பறக்கும் பாதரட்சைகள்! ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்களை கடக்கக் கூடிய காலணிகள் அப்படியே இருந்தன. இந்த அழகிய உடைகளுக்கு ஏற்றதாக இல்லை, அந்த மந்திரக் காலணி. ஆனால் மங்களகிரியில் உள்ள அந்த அழகியின் முன்னால் அப்போதே போக அது பயன்படுமே என்றுதான் அதைக் கழற்றாமல் அணிந்திருந்தான் கீர்த்தி. மந்திர சக்தி உடையதானாலும் எடுப்பாக இல்லை அது.

நான் அணிந்துள்ள புதிய பகட்டான ஆடைக்கு ஏற்றதில்லை இது' என்று முடிவு செய்தவன் அங்குள்ள பொருள்களை மறுபடியும் ஆராய்ந்தான். நெடுந்தூரத்தை விரைவில் கடக்கும் வேறு ஏதாவது சாதனம் இருக்காதா என்று அவன் கண்களும் கைகளும் பரபரத்தன, குவிந்து கிடந்த பொருள்களைக் கிளறின. 'ஆ! இதோ இந்தக் கம்பளம்? இதற்குப் பறக்கும் சக்தி இருக்குமானால்? பறக்கும் கம்பளங்களைப் பற்றி எத்தனையோ கதைகளைப் படித்திருக்கிறேனே!' இப்படி எண்ணமிட்டபடி அந்தக் கம்பளத்தை எடுத்துத் தூசி தட்டி விட்டுத் தரையில் விரித்தான். தன் உடைகளுக்கு ஏற்ற புதிய காலணிகளை வரவழைத்து அணிந்து கொண்டான். தன்னைப் பிறர் பார்வையிலிருந்து—மறைக்கும் மந்திரக் குல்லாயையும் மறக்காமல் எடுத்துக் கொண்டான். ஆனால் அதைத் தலையில் அணிந்து கொள்ளவில்லை. கம்பளத்தின் மீது அமர்ந்து, ''மங்களகிரியில் அந்த விழா நடக்கும் மாளிகையின் தோட்டத்தில் போய் நான் இறங்க வேண்டும்'' என்று ஆணையிட்டான் கம்பளத்துக்கு! அடுத்த நிமிஷம் கம்பளம் விரைப்பாக நீட்டி நிமிர்ந்து கொண்டது. ஜிவ்வென்று தரையிலிருந்து கிளம்பிச் சாளரத்தின் வழியே ஆகாய வீதியிலே பறக்கும் தட்டைப் போல மிதந்து செல்லலாயிற்று. மந்திர தந்திரங்களில் இது நாள் வரை நம்பிக்கை இல்லாதிருந்த கீர்த்திக்குக் கம்பளம் தன்னைச் சுமந்தபடி பறக்கும் காட்சி ஒரே பிரமிப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இனி மந்திர மாயங்களைப் பற்றி ஆராய வேண்டியதுதான் என்று அப்போதே தீர்மானித்துக் கொண்டான்!



காற்றிலே பறந்து மிதக்கும் காகிதம் தரையிலே போய் இறங்கிப் பதிவது போல; மங்களகிரியில் உள்ள அரண்மனைத் தோட்டத்தில் அலுங்காமல் நலுங்காமல் போய் இறங்கியது, கீர்த்தியை ஏற்றி வந்த கம்பளம். பலகை போல் விரைப்பாக இருந்த கம்பளம் தரையில் இறங்கியதும் அதில் தொய்வு ஏற்பட்டது. கீர்த்தி கம்பளத்தைச்

சுருட்டி குண்டு மல்லிகைப் புதருக்கிடையே ஒளித்து வைத்துவிட்டு அரண்மனைக் கூடத்துக்கு விரைந்தான், உருவை மறைக்கும் குல்லாயை அணியாமல்தான்!


இளவரசன் கீர்த்தியைக் கண்டதும் வாயில் காப்போர் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள். ஒரு காவலாளி உள்ளே ஓடினான் பரபரப்புடன் இளவரசனின் வரவை அறிவிக்க.

''மகாராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட, ராஜ குல திலக, விசித்திரபுரி இளவரசர்..... அறிவின் பிறப்பிடம், அழகின் இருப்பிடம் வீரத்தின் உறைவிடம் கீர்த்திவர்மர் வருகிறார், பராக்..! பராக்...!'' என்று முழக்கினான். புன்னகை தவழும் முகத்துடன் கம்பீரமான நடை நடந்து கட்டியக்காரனின் விளக்கத்துக்கு இலக்கணமாகக் கீர்த்தி அங்கு தோன்றினான். அலைஅலையாகப் பேச்சும் சிரிப்புமாக இருந்த அந்தக் கூட்டத்திலே சட்டென்று ஒரு அமைதி ஏற்பட்டது. இளவரசன் கீர்த்திவர்மனுக்கு வழி விட்டு ஒதுங்கினார்கள். அவன் அருகே வரும்போது சிரம் தாழ்த்தி வணங்கி வரவேற்றார்கள். மங்களகிரியின் நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள மாணிக்கவர்மர் அரக்கப் பரக்க' ஓடி வந்தார். இளவரசனை வரவேற்று அழைத்துக் கொண்டு போகும் போதே வினயத்துடன் கேட்டார் : ''வருவதாகச் செய்தியோ தூதுவனோ கூட வரவில்லையே.? தங்களை இப்படி சாதாரணமாக வரவேற்க வேண்டி இருப்பதற்கு வருந்துகிறேன்.''

''அதனால் பரவாயில்லை. ஏதோ நினைத்துக் கொண்டேன், கிளம்பி விட்டேன். ம். சரி இங்கு என்ன கொண்டாட்டம்?''

''என் சகோதரியின் பெண்ணுக்கு இன்று பிறந்த நாள். அதைக் கொண்டாடுவதற்காகவே இந்தச் சிறு கூட்டம். தாங்கள் வருகை புரிந்தது அவள் அதிர்ஷ்டம் தான்...'' என்று கூறியவாறே கீர்த்தியை ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்தார். கீர்த்தியின் கண்கள் அவன் இதயத்தில் குடியேறியிருந்த அழகியைத் தேடியலைந்தன. 'அவள் எங்கே? ஒளி உமிழும் ஒப்பற்ற அந்த அழகுச் சுடர் எங்கே?' என்று தவித்தவனின் முன்னால், மாணிக்கவர்மர் வந்து நின்றார். அவர் அருகே... அது? கொடியெனத் துவண்ட நிலையில் நாணத்தின் சுமை தாங்காது தாழ்ந்த தலையுடன் கூப்பிய கரங்களுடன்...? கீர்த்தி பரபரப்புடன் நிமிர்ந்து அமர்ந்தான்.

''என் சகோதரியின் ஒரே செல்வ மகள். குந்தளவல்லி என்று பெயர். இவளது பிறந்த தின விழாவுக்குத் தாங்கள் வருகைத் தந்தது எங்கள் பாக்கியம்'' என்றவர் அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பி, ''குந்தளா இளவரசர் கீர்த்தி வர்மர். அறிவின் சிகரம். ஆற்றலின் இருப்பிடம்...'' என்றார். கீர்த்தியின் கண்கள் இமைக்க மறந்தன. குந்தள வல்லியோ அந்த அழகனை நிமிர்ந்து பார்த்தவள், பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளுடைய அழகில் அவன் மயங்கியது போலவே அவளும் அவனுடைய அறி



வொளி வீசும் கம்பீரமான தோற்றத்தில் தன்னைப் பறி கொடுத்தாள். இவர்கள் ஒருவரை ஒருவர் பார்வையால் விழுங்கிக் கொண்டிருக்க அந்தக் கூடத்தின் நிசப்தம் மெள்ள மெள்ளக் கலைந்தது. கசமுசவென்று பேச்சுக்கள் மெதுவாகத் தோன்றி வரவரப் பெரிதாகியது. இளவரசனையும் குந்தளாவையும் இணைத்துத்தான் அவர்களது பேச்சு இருந்தது என்பதைச் சொல்லவா வேண்டும்?

தன் நிலையடைந்த இருவரும் சட்டென்று சூழ்நிலையின் சூட்டை உணர்ந்தார்கள். ''என் வருகையால் இங்கிருந்த சகஜ நிலைக்கு ஊறு விளைந்து விட்டது போலிருக்கிறது'' என்றான் கீர்த்தி.

''அப்படியொன்றும் இல்லை. இளவரசர் விஜயம் செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?'' என்றவர் மறு பக்கம் திரும்பி ''ம்...நடனம் ஆரம்பமாகட்டும்'' என்றார்.

''நாட்டிய மாட வேறு யார் வர வேண்டும்? உங்களது சகோதரியின் செல்வ மகளே அற்புதமாக நடனமாடுவாள் போலிருக்கிறதே'' என்றான் கீர்த்தி.

மாணிக்கவர்மரின் விழிகள் வியப்பால் விரிந்தன. ''ஆமாம், உண்மை தான். அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்றார் திறந்த வாயை மூடாத திகைப்புடன்.

''இவள் நிற்கும் இந்த ஒயில், அவள் பார்வையில் தோன்றி மறையும் பாவங்கள், உடல் அமைப்பு, நீண்ட கைகள் இவைகளே இப் பெண் நாட்டியத்தில் வல்லவள் என்பதை அறிவிக்கின்றனவே...அதுமட்டுமல்ல, வீணை வாசிப்பிலும் திறமை மிக்கவளாக இருக்க வேண்டுமே'' என்றான்.


''ஆமாம். நீங்கள் ஆரூடத்திலும் வல்லவர் என்பதை இப்போது தான் அறிந்தேன்'' என்றார் மாணிக்கவர்மர்.

''ஆரூடத்தின் சக்தியால் நான் இதை அறியவில்லை. அங்க லட்சணங்களினால் அறிந்தேன். வீணையை மீட்டி சப்த ஸ்வரங்களை எழுப்பும் வல்லமை பெற்றவை அந்தஅழகிய விரல்கள்என்பதைப் பார்த்தாலே தெரிகிறதே'' என்றான். மறைந்திருந்து அவள் வாதத் திறமையோடு பேசியதைக் கேட்டது நினைவுக்கு வரவே அந்தக் குரலின் இனிமையை எண்ணியவனாகப் புன்சிரிப்புடன், ''உங்கள் குந்தளவல்லிக்கு அற்புதமான சாரீரமும் உண்டென்று எண்ணுகிறேன். இசைக் கலையை முறையாகப் பயின்றிருக்க வேண்டுமே?'' என்றான்.

அங்கு கூடி இருந்த அத்தனை பேருக்கும் இளவரசரின் அறிவாற்றலைப் பற்றித் தெரியும். கேள்விப்பட்டிருந்தார்கள். ஆனால் இப்போது கண் முன்னாலேயே ஓர் உருவத்தின் அங்க லட்சணங்களைக் கொண்டே அதன் திறமைகளைக் கூறும் அபாரமான அறிவைக் கண்டு திகைத்து திக்பிரமை கொண்டார்கள்.

''குந்தளவல்லி உன் அழகிய நாட்டியத்தை நான் கண்டு ரசிக்கலாமா?'' என்று கேட்டான் கீர்த்தி.

அந்த அழகியின் முகம் செந்தாமரையாகச் சிவந்தது. (தொடரும்)



தெரியுமா?



1247. சீனாவின் ஜனத்தொகை உத்தேசமாக — 1000 மிலியன் 500 மிலியன் ஒரு மிலியன், அரை மிலியன் இவற்றில் எது சரி ?

1248. வெண்கலம் எந்த இரு லோகங்களின் கலவை?

1249. நம் நாட்டில் அரசாங்கத்தால் வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவமிக்க விருதுகளாகக் கருதப்படுபவை என்னென்ன?

1250. பொது வாழ்வில் மிக உயர்ந்த சேவைக்கும் அறிவாளிகளுக்கும் கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்குவது போலப் படைகளில் பணி புரியும் வீரர்களுக்கும் விருதுகள் உண்டு. அவை என்னென்ன தெரியுமா ?

1251. மாற்று இதயம் பொருத்தும் முதல் ஆபரேஷனை முப்பது பேர் கொண்ட ஒரு குழு நிகழ்த்தியது. இதற்குத் தலைமை வகித்தவரின் பெயர் என்ன ?

1252. லண்டனின் புகழ்பெற்ற மீன் அங்காடியுள்ள நகரத்தின் பெயர்?

1253. பதினாறும் நூற்றாண்டில் ஸ்பானிஷ்காரர்களால் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் ஒரு தீவுக்கூட்டம் கண்டு பிடிக்கப்பட்டது. அவற்றின் பெயர் என்ன தெரியுமா?

1254. ஸ்காட்லாந்தியர்களின் — தேசிய வாத்தியமாகக் கருதப்படுவது எது ?

1255. தையல் யந்திரம் தயாரிக்கும் நிறுவனங்கள் நம் நாட்டில் எத்தனை இருக்கின்றன தெரியுமா?

1256. 'ஹரிக்கேன் லாந்தர்' என்று கேள்விப்பட்டிருப்பீர்களே. உங்களில் சிலர் பார்த்துமிருப்பீர்கள். நம் நாட்டில் இந்த விளக்கைத் தயாரிக்கும் நிறுவனங்கள் எத்தனை உள்ளன ?

1257. உலகின் முதல் மனிதர்களான ஆதாம் ஏவாள் இருவருக்கும் பிறந்த பிள்ளையின் பெயர் தெரியுமா ?

1258. ஐக்கிய அரபுக் குடியரசின் தலைநகர் எது ?

1259. தங்கத்தின் தரத்தை விளக்குவதற்கு ஒரு பதம் பயன்படுகிறது. அது எது ?

1260. காப்பி நம் நாட்டில் அதிகமாக எங்கு பயிரிடப்படுகிறது? எத்தனை நிலப்பரப்பில்?

1261. நம் நாட்டில் உள்ள மொத்த சிமெண்ட் தொழிற்சாலைகள் எவ்வளவு ?

1262. பூச்சி ஆராய்ச்சிக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர் தெரியுமா ?


1263. முதல் எலிஸபெத் ராணியின் பெற்றோர்களின் பெயர் என்ன ?

1264. காலம் இடம் பொதுத் தொடர்புத் தத்துவத்தைக் கண்டதினால் ஒரு ஜெர்மானிய பௌதிக விஞ்ஞானி புகழ் பெற்றார். அவர் யார் தெரியுமா ?

1265. 1889ம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சிக்காக ஒரு பிரெஞ்சு எஞ்சினியர் புகழ் பெற்ற ஒரு கோபுரத்தை நிர்மாணித்தார். அவர் யார் ?

1266. ஜப்பானின் தீவான ஹோன்ஷுவிலுள்ள மிகப் பிரபலமான மலைமுகட்டின் பெயர் தெரியுமா?

தெரியுமே!



விடைகள்: 1247. இருநூறு மில்லியன்- 1248. தாமிரமும் தகரமும். 1249. பாரத ரத்னா, பத்ம விபூஷன், பத்ம பூஷன், பத்மஸ்ரீ. 1250. பரம் வீர்சக்ரம், மஹாவீர் சக்ரம், வீர சக்கரம் ஆகிய விருதுகள். 1251. ஸி.என். பார்னர்டு. 1252. பில்லிங்ஸ்கேட். 1253. பெர்முடாத் தீவுகள். 1254. பாக்பைப் என்னும் காற்று இசைக் கருவி. 1255. ஒன்று நிறுவனங்கள். 1256. பன்னிரண்டு தொழிற்சாலைகள். 1968ல் 56 லட்சம் விளக்குகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1257. கெயின் 1258. கெய்ரோ. 1259. காரட். 1260. பாரதத்தில் தென்னகம்தான் காப்பி உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. 27 எஸ்டேட்டுகள் பாரதத்தில் உள்ளன. 3, 21, 22 ஏக்கரா நிலப்பரப்பில் காப்பி பயிரிடப்படுகிறது. 1261. 1970ம் ஆண்டு கணக்குப்படி நாற்பது தொழிற்சாலைகள் உள்ளன. 1262. என்டோமாலஜி (Endomology) 1263. எட்டாம் ஹென்றியும் அனிபோலினும். 1264. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். 1265. அலெக்ஸாண்டர் கஸ்டேவ் ஐஃபெல் என்பவர் - இன்றும் இவர் பெயரால் அந்த அமைப்பு அழைக்கப்படுகிறது. 1266. ஃபியூஜியாமா.

சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!

இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய் - 400001





'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்




வீரச் சிறுவர்
ராசுவும் வாசுவும்
சூனியக் கிழவியை சந்தித்த படலம்
கும்மிருட்டான காடு. குடிசை ஒன்றைக் காண்கிறார்கள்
ஓர் ஆள்கூட அங்கில்லே ஏராளமான முயல்கள். தேரைகளின் கூட்டம்.
அடுத்த கணமே அடடா, விபரீதம்! பிராணிகள் பேசத் துவங்கின.
உதவுங்கள், நாங்களும் உங்களைப் போலவே மனிதர்கள்
திடீரென ஓர் இடி! துடைப்பத்திலேறித் துள்ளிவந்தாள் ஒரு சூனியக் கிழவி.
"பிடிபட்டீர்களா! பிடி சாபம்! உங்களைத் தேரைகளாக்குவேன்" சீறினாள் கிழவி.
யோசனையோடு ராசுவும் வாசுவும் வீசினார்கள் பளிச்செனப் பாப்பின்ஸ் பேக்கெட்டுகளை.
சொக்கி மகிழ்ந்தாள் சூனியக் கிழவி. சிக்கிய சிறுவரும் விடுதலை பெற்றனர்!